## (ஆ) கைத்தொழில் அபிவிருத்தி

### (அ) தனியார் துறை

**உற்பத்தி**

**முக்கிய போக்குகள்**

சென்ற ஆண்டுகளைப் போல், கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் கைத்தொழில் உற்பத்திப் பகுப்பாய்வு தனியார் துறைக் கைத்தொழில்களினுற் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக் கைத்தொழில்கள், 21 கைத்தொழிற் பகுப்புக்களுள் அடக்கப்பட்டுள்ளன. அட்டவணை II (ஆ) அ 1இல் குறிப்பிட்டுள்ளபடி, சில பகுப்புக்களிலே இவ்வாண்டில், தரவுகளை அனுப்பிய தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, 1965ஆம் ஆண்டிலும் குறைவாக இருந்தது. ஆயினும், தரவுகள் சமர்ப்பிக்கும் தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை, 1381லிருந்து 1394க்குச் சிறிதளவாக அதிகரித்தது.

மேற்குறித்த அடிப்படையின்படி, கைத்தொழில் உற்பத்திப் பெறுமானம், 1965ஆம் ஆண்டிற்குரிய 8470 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 8503 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்வுற்றது. இது, 1965ஆம்[1] ஆண்டிற்குரிய 57·6 சதவீதத்திற்கெதிராக, இவ்வாண்டில், 0·39 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாகும். பல்வேறு உணவுத் தயாரிப்புகள் விஸ்கோத்தும், கொக்கோ, சொக்களற்று இனிப்புப் பதார்த்தங்களும்; பல்வேறு இரசாயனப் பொருட்கள்; மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கிட்டுப் பொருட்கள், ஆகியனவற்றின் கைத்தொழில் உற்பத்தியில் அதிகரிப்புகள் காணப்பட்டன. சில கைத்தொழிற்றெருகுதிகளைப் பொறுத்தமட்டிற் குறைந்தளவு தொழில் நிலையங்கள் தரவுகளை அனுப்பியபொழுதும், இக் கைத்தொழிற்றெருகுதிகளுட் சில, உயர்ந்த அளவு உற்பத்தியை உடையனவாக விளங்கின. தற்போதைய அளவை, பிரதான பகுப்புப் பொருட்களின் மொத்த உற்பத்தியை எவ்வளவிற்குச் சரியாகத் தருகின்றது என்பதையோ, அன்றி உண்மை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களை, இவ்வளவை எவ்வளவிற்குச் சேர்க்கின்றது என்பதையோ, குறிப்பிடவியலாது. தரவுகளை அனுப்பாத சில கைத்தொழில் நிலையங்கள், கூடிய திறமையுள்ள கூறுகளின் போட்டியினுல், அன்றிப் போதியளவு மூலப் பொருட்கள் கிடைக்கப்பெருமையினுல், உற்பத்தியில் ஈடுபடாதிருக்கலாம். எனினும், அநேகமான சந்தர்ப்பங்களிலே, தரவுகளை அனுப்பாத தொழில் நிலையங்கள், இக் கைத்தொழிற்றெருகுதிகளில் வழக்கமாகச் சிறு கூறுகளாகவே இருந்தன. இங்கு சேர்க்கப்பட்டிருக்கும் பெரிய கூறுகளின் உற்பத்தி அதிகரிப்பு, இங்கு சேர்க்கப்படாதிருக்கும் சிறு கூறுகளினது உற்பத்தியை உள்ளடக்காமையை, மொத்த உற்பத்தி விளைவிற் போதியளவிற்கு ஈடு செய்திருக்கும் என்பது இயலுமாகவிருக்கும்.

சென்ற ஆண்டு, பல்வேறு உணவுத் தயாரிப்புகள் என்ற பகுப்பில், 96 தொழில் நிலையங்கள் தரவுகள் சமர்ப்பித்தமைக்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 86 தொழில் நிலையங்கள் தரவுகள் சமர்ப்பித்தன. உற்பத்தி, 1092 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1345 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. தாவர எண்ணெய்களும், கொழுப்புகளும் என்ற தொகுதியிலே, தரவுதந்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட அதேயளவாகவிருந்தது. ஆனுல் உற்பத்தியில் 1965ஆம் ஆண்டிற்குரிய 1904 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 1423 இலட்சம் ரூபாய்களுக்குக் கூரிய வீழ்ச்சி ஏற்பட்டது. விஸ்கோத்து, கொக்கோ, சொக்களற்று, இனிப்புப் பதார்த்தக் கைத்தொழில்களிலே, தரவுதந்த கூறுகளின் எண்ணிக்கை ஏழாற் குறைவுற்ற பொழுதும், உற்பத்தி 349

---

1. 1965ஆம் ஆண்டுக் கூரிய அதிகரிப்பிற்கு, அவ்வாண்டு அளவை எல்லையின் குறிப்பிடத்தக்களவு விரிவே காரணமாகும்.

அட்டவணை II (ஆ) அ. 1

## கைத்தொழில் உற்பத்தியும் வேலை நிலையும் 1963—66

| கைத்தொழிற் தொகுதி | தொழில் நிலையங் களின் எண்ணிக்கை | | | | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | மொத்த ஆள் வேலை நாட்களில் (1000) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1963 | 1964 | 1965 | 1966 | 1963 | 1964 | 1965 | 1966 | 1963 | 1964 | 1965 | 1966 |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் ... | 60 | 62 | 96 | 86 | 3433 | 3520 | 3622 | 3647 | 871 | 901 | 1070 | 1053 |
| II. தாவர எண்ணெய்களும் கொழுப்புகளும் ... | – | – | 43 | 44 | – | – | 3770 | 3967 | – | – | 936 | 893 |
| III. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும், இறைச்சி மீன், ஏனைய கடல் உணவுகளும் ... | 16 | 32 | 33 | 26 | 238 | 58 | 453 | 454 | 67 | 97 | 120 | 105 |
| IV. விஸ்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும் இனிப்புப் பதார்த்தங்களும் ... | 62 | 82 | 65 | 58 | 2065 | 2590 | 2927 | 3192 | 591 | 693 | 795 | 863 |
| V. குளிர்பானங்களும் வாயுப் பானங்களும் ... | 25 | 33 | 29 | 22 | 988 | 1088 | 1343 | 1257 | 284 | 316 | 367 | 294 |
| VI. பியரும் ஸ்ரவுட்டும் ... | 1 | 1 | 1 | 2 | 303 | 300 | 338 | 416 | 68 | 84 | 92 | 123 |
| VII. புகையிலை ... | 23 | 23 | 460 | 473 | 3960 | 4214 | 8235 | 8905 | 1104 | 1175 | 2141 | 2500 |
| VIII பின்னிய துணிகளும் பொருட்களும் அத்துடன் தைத்த உடைகளும், காலணி தவிர்ந்த ஏனைய ஆடை அணிகளும் ... | 34 | 103 | 110 | 123 | 4500 | 6955 | 6841 | 6916 | 1261 | 1749 | 1541 | 1617 |
| IX. நூற்றலும், நெய்தலும், துணிகளைச் சீராக்கலும் ... | – | – | 66 | 81 | – | – | 9650 | 11904 | – | – | 2801 | 3259 |
| X. சாலணிகளும் தோற் பொருட்களும் ... | 11 | 36 | 52 | 45 | 1616 | 1990 | 2130 | 2282 | 419 | 538 | 590 | 628 |
| XI. காலணிகள், தவிர்ந்த இரப்பர் பொருட்கள் ... | 20 | 24 | 27 | 21 | 1177 | 1304 | 1435 | 1354 | 377 | 361 | 396 | 346 |
| XII. பல்வேறு இரசாயனப் பொருட்கள் ... | 70 | 96 | 123 | 119 | 2498 | 3306 | 4946 | 4704 | 673 | 884 | 1331 | 1258 |
| XIII. காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் ... | 33 | 57 | 60 | 54 | 1316 | 2187 | 2347 | 2369 | 374 | 638 | 667 | 674 |
| XIV. உலோகப் பொருட்கள் ... | 28 | 92 | 98 | 113 | 876 | 2629 | 3365 | 3912 | 240 | 743 | 926 | 917 |
| XV. மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள் வழங்கீட்டுப் பொருட்கள் ஆகியன ... | – | – | 26 | 31 | – | – | 1126 | 1212 | – | – | 263 | 277 |
| XVI. தயாரிப்புப் பொருட்கள் (வேறிடத்திற் கூறப்படாதவை) ... | 44 | 69 | 75 | 81 | 671 | 1058 | 1742 | 1717 | 191 | 279 | 415 | 418 |
| XVII. பீங்கான் பொருட்கள் ... | 1 | 1 | 1 | 1 | 261 | 300 | 253 | 279 | 81 | 86 | 71 | 78 |
| XVIII. ஒட்டுப் பலகை ... | 1 | 1 | 1 | 1 | 579 | 611 | 624 | 744 | 185 | 171 | 187 | 222 |
| XIX. கனிப்பொருள் மணல்கள் ... | 1 | 1 | 1 | 1 | 83 | 105 | 120 | 118 | 23 | 33 | 36 | 36 |
| XX. கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் ... | 1 | 1 | 1 | 1 | 199 | 200 | 200 | 250 | 62 | 62 | 65 | 81 |
| XXI. சீமெந்தும், சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... | 2 | 3 | 13 | 11 | 1541 | 1507 | 1868 | 1819 | 440 | 470 | 526 | 481 |
| மொத்தம் ... | 433 | 717 | 1381 | 1394 | 26304 | 34222 | 56835 | 61418 | 7301 | 9280 | 15336 | 16123 |

## புள்ளிவிபரச் சுருக்கம்

| கூலிச் செலவு (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | உற்பத்தியின் பெறுமானம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | ஒரு ஆள் வேலை நாளுக்கான கூலி (ரூபாய்களில்) | | | | ஒரு தொழிலாளிக்கான—ஆள் வேலை நாட்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1963 | 1964 | 1965 | 1966 | 1963 | 1964 | 1965 | 1966 | 1963 | 1964 | 1965 | 1966 | 1963 | 1964 | 1665 | 1966 |
| 5·8 | 6·0 | 5·1 | 5·4 | 147·6 | 160·7 | 109·2 | 134·5 | 6·62 | 6·65 | 4·80 | 5·13 | 254 | 256 | 295 | 289 |
| – | – | 4·0 | 4·0 | – | – | 190·4 | 142·3 | – | – | 4·29 | 4·36 | – | – | 269 | 225 |
| 0·3 | 0·4 | 0·5 | 0·4 | 3·4 | 3·8 | 5·4 | 5·1 | 4·30 | 4·63 | 4·22 | 4·32 | 282 | 271 | 265 | 231 |
| 2·3 | 2·6 | 2·9 | 3·2 | 28·8 | 30·9 | 34·9 | 38·6 | 3·94 | 3·78 | 3·65 | 3·67 | 286 | 268 | 272 | 270 |
| 2·1 | 2·5 | 2·9 | 2·2 | 11·4 | 13·4 | 16·0 | 11·6 | 7·54 | 8·00 | 8·64 | 7·60 | 287 | 294 | 273 | 233 |
| 0·4 | 0·5 | 0·8 | 1·3 | 2·4 | 2·7 | 7·6 | 5·5 | 5·45 | 5·50 | 8·22 | 10·75 | 303 | 280 | 273 | 297 |
| 9·6 | 10·1 | 19·0 | 22·0 | 39·0 | 46·2 | 52·0 | 52·3 | 8·66 | 8·64 | 8·71 | 8·80 | 279 | 279 | 260 | 280 |
| 4·3 | 6·9 | 6·4 | 6·4 | 38·4 | 54·9 | 55·5 | 56·1 | 3·43 | 3·93 | 4·15 | 3·93 | 280 | 251 | 243 | 234 |
| – | – | 9·9 | 13·8 | – | – | 91·3 | 95·1 | – | – | 3·54 | 4·24 | – | – | 290 | 274 |
| 3·3 | 4·5 | 4·6 | 5·3 | 22·3 | 23·4 | 24·7 | 27·7 | 7·86 | 8·30 | 7·75 | 8·44 | 259 | 270 | 277 | 275 |
| 2·3 | 1·9 | 2·0 | 1·9 | 13·7 | 17·0 | 19·1 | 18·9 | 6·10 | 5·21 | 5·15 | 5·37 | 320 | 277 | 276 | 256 |
| 4·6 | 6·4 | 9·4 | 10·0 | 56·0 | 73·7 | 91·2 | 101·9 | 6·90 | 7·21 | 7·08 | 7·92 | 270 | 267 | 269 | 267 |
| 2·9 | 3·8 | 4·1 | 4·3 | 18·3 | 30·1 | 29·3 | 33·8 | 7·70 | 5·93 | 6·15 | 6·31 | 284 | 292 | 284 | 285 |
| 1·2 | 4·1 | 5·2 | 5·0 | 15·1 | 38·5 | 44·7 | 49·0 | 5·17 | 5·52 | 5·57 | 5·42 | 270 | 283 | 275 | 234 |
| – | – | 1·9 | 2·6 | – | – | 14·0 | 20·8 | – | – | 7·19 | 9·25 | – | – | 234 | 229 |
| 0·8 | 1·2 | 1·6 | 1·9 | 5·8 | 11·0 | 14·7 | 16·2 | 4·11 | 4·31 | 3·96 | 4·42 | 285 | 264 | 238 | 243 |
| 0·6 | 0·8 | 0·8 | 0·8 | 2·5 | 2·4 | 2·4 | 2·3 | 7·79 | 8·68 | 11·50 | 10·18 | 259 | 288 | 253 | 278 |
| 1·4 | 1·3 | 1·8 | 2·0 | 3·9 | 3·9 | 5·2 | 6·5 | 7·65 | 7·70 | 9·48 | 8·91 | 320 | 280 | 300 | 298 |
| 0·2 | 0·3 | 0·2 | 0·2 | 0·1 | 0·9 | 1·3 | 1·4 | 6·81 | 7·52 | 6·12 | 6·20 | 282 | 312 | 300 | 305 |
| 0·5 | 0·6 | 0·6 | 0·7 | 1·2 | 1·0 | 1·6 | 1·9 | 7·61 | 8·06 | 8·61 | 8·71 | 311 | 310 | 325 | 325 |
| 3·4 | 3·5 | 4·9 | 4·0 | 22·5 | 28·0 | 36·5 | 28·8 | 7·79 | 7·33 | 9·29 | 8·39 | 312 | 312 | 282 | 264 |
| 46·0 | 57·4 | 88·6 | 97·4 | 432·4 | 537·5 | 847·0 | 850·3 | 6·30 | 6·19 | 5·78 | 6·04 | 278 | 271 | 270 | 263 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலட்சம் ரூபாய்களிலிருந்து 386 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. பியர், ஸ்ரவுட் கைத்தொழில்களின் உற்பத்தியிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து இரண்டிற்கு அதிகரித்திருக்கையில் உற்பத்தி, மூலப்பொருட்களின் போதாமையினால் 1965ஆம் ஆண்டிற்குரிய 76 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966ஆம் ஆண்டு 55 இலட்சம் ரூபாய்களுக்குக் கூர்மையாகக் குறைவுற்றது. புகையிலைக் கைத்தொழிற் கூறுகளின் எண்ணிக்கை 1965ஆம் ஆண்டிற்குரிய 460லிருந்து 1966ஆம் ஆண்டு 473ற்கு அதிகரித்தது. ஆனால் உற்பத்தி அதிகரிப்பு மிகச் சிறியதாகும். அதேபோல, பின்னப்பட்ட துணிகளும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளுமான கைத்தொழில்களிலே, தரவுதந்த கூறுகளின் எண்ணிக்கை, உற்பத்திப் பெறுமானத்தில் மிகச் சிறு மாற்றத் துடன், 110லிருந்து 123ற்கு அதிகரித்தது. நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் ஆகிய கைத்தொழில்களில் 1965ஆம் ஆண்டிற்குரிய 66 தொழில் நிலையங்களுக்கெதிராக, இவ்வாண்டு 81 தொழில் நிலையங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன. உற்பத்தி 913 இலட்சம் ரூபாய்களிலிருந்து 951 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. காலணி, தோற்பொருட்களின் கைத்தொழில்களில், தரவுகள் சமர்ப்பித்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, 52லிருந்து 45ற்குக் குறைவுற்ற பொழுது, உற்பத்தியானது, 1965ஆம் ஆண்டிற்குரிய 247 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 277 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

இரப்பர்ப் பொருட்கள் (காலணிகளைத் தவிர்த்துச்) செய்யப்படும் தொழில் நிலையங் கள் 6 கூறுகளால் 21 கூறுகளுக்குக் குறைவுற்றன. இவற்றின் உற்பத்தியும், 1965ஆம் ஆண்டிற்குரிய 191 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966ஆம் ஆண்டு 189 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. பல்வேறு இரசாயனப் பொருட்களின் தொகுதி யிலுள்ள தொழில் நிலையங்கள், 123லிருந்து 119ற்குக் குறைவுற்றபொழுது, இவற்றின் உற்பத்தி 912 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1019 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. வேறிடத்திற் குறிப்பிடப்படாத உற்பத்திப் பொருட்கள்; உலோகப் பொருட்கள்; மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் ஆகிய பகுப்புக்களிலே தரவு தந்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், அவற்றின் உற்பத்தி யிலும் மெச்சத்தக்க இலாபங்கள் ஏற்பட்டன. உலோகப் பொருட்களின் உற்பத்தியானது, 1965ஆம் ஆண்டிற்குரிய 447 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 490 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்களினது உற்பத்தி, 140 இலட்சம் ரூபாய்களிலிருந்து 208 இலட்சம் ரூபாய்களுக்கும், வேறிடத்திற் குறிப்பிடப்படாதனவாகிய தயாரிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தி, 147 இலட்சம் ரூபாய்களிலிருந்து 162 இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகரித்தன. பீங்கான் பொருட்கள், ஒட்டுப்பலகை, கனிப்பொருள் மணல்கள், கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் ஆகிய ஒவ்வொரு பகுப்பிற்கும் ஒவ்வொரு தொழில் நிலையம் மாத்திரமே இருக்கின்றது. இவற்றில், ஒட்டுப்பலகையிலும், கைத்தொழிலுக் கான அடிப்படை இரசாயனப் பொருட்களிலுமே, உற்பத்தி அதிகரிப்புகள் காணப்பட்டன. சீமெந்து, சீமெந்துப் பொருட்கள், அஸ்பெஸ்ரோஸ் பொருட்களின் தொகுதியிலே தரவு தந்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 13லிருந்து 11ற்குக் குறைவுற்ற துடன், அவற்றின் உற்பத்தியும், 365 இலட்சம் ரூபாய்களிலிருந்து 288 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது.

**கைத்தொழில் வகையின்படி பாகுபடுத்தப்பட்ட உற்பத்தி**

மொத்த உற்பத்தியில் முழுமையான அதிகரிப்பு ஏற்பட்ட பல்வேறு உணவுத் தயாரிப்புகள் என்ற தொகுதியுள், பாற்பண்ணைப் பொருட்கள், கால்நடை, கோழித்தீன், ஆகிய கைத்தொழில்களில், உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டது. பாற்பண்ணைப் பொருட்கள் 1965ஆம் ஆண்டிற்குரிய 130 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு, 153 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தபொழுது, கால்நடை, கோழித்தீன்களின் உற்பத்தி,

1965ஆம் ஆண்டிற்குரிய 264 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 611 இலட்சம் ரூபாய்களுக்கு இருமடங்கிலும் பார்க்கக் கூடுதலாக அதிகரித்தது. உப்பு உற்பத்தியும், 1965ஆம் ஆண்டிற்குரிய 15 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 51 இலட்சம் ரூபாய்களுக்குக் கூர்மையாக அதிகரித்தது. மற்றைய பகுப்புக்களான தேங்காய்த் துருவலும், பனிக்கட்டியும் அதிகரிப்புக்களைக் காட்டவில்லை. 1962ஆம் ஆண்டு தொடக்கம் பாற் பண்ணைப் பொருட்களின் அதிகரிப்பு மெச்சத்தக்கதாகவிருந்தது. தற்போதைய உற்பத்தி அளவு, 1962ஆம் ஆண்டுப் பெறுமானத்திலும் பார்க்கக் கிட்டத்தட்ட 5 மடங் காகும். 1962ஆம் ஆண்டின் அளவிலும் பார்க்க 3 மடங்காக விளங்கியதான கால்நடை, கோழித்தீன்களின் கூரிய அதிகரிப்பிற்கு, கோழிப் பண்ணைக் கைத்தொழிலின் குறிப்பிடத்தக்களவு விரிவும், இறக்குமதி நிரம்பல்களிற் குறைப்பேற்பட்டவுடன் அவற் றிற்காக உள்ளூர்க் கோழித் தீன்கள் பதிலீடு செய்ததுமே, பெரும்பாலும் காரணமாகும்.

பிரதான தொகுதியான விஸ்கோத்து, கொக்கோ, சொக்களற்று, இனிப்புப் பதார்த்தங்களின் கீழான நான்கு உற்பத்தித் தொகுதிகளுள் இரு தொகுதிகள் அதிகரித் தன. விஸ்கோத்து உற்பத்தி 1965ஆம் ஆண்டிற்குரிய 148 இலட்சம் ரூபாய்களிலிரு ந்து 1966ஆம் ஆண்டு 196 இலட்சம் ரூபாய்களுக்கும், அவிந்த இனிப்புப் பதார்த் தங்கள் 76 இலட்சம் ரூபாய்களிலிருந்து 96 இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகரித்த பொழுது, சொக்களற்றினதும் ரொப்பியினதும் உற்பத்தி 100 இலட்சம் ரூபாய்களிலிருந்து 70 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. 1964ஆம் ஆண்டு வரைக்கும் கிட்டத்தட்ட 24 இலட்சம் ரூபா சராசரி உற்பத்தியைச் செய்த பியர், ஸ்ரவுட் கைத்தொழில், அதன் உற்பத்தியை 1965ஆம் ஆண்டு 76 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. ஆனால் 1966ஆம் ஆண்டு இதன் உற்பத்தி 55 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

சேட்டுக்களின் உற்பத்தி, 1965ஆம் ஆண்டிற்குரிய 303 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 373 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தபொழுது, ஏனைய தைக்கப் பட்ட உடைகளின் பெறுமானம், 252 இலட்சம் ரூபாய்களிலிருந்து 188 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. 1966ஆம் ஆண்டிற்கான சேட்டு உற்பத்திப் பெறுமானம், இதுவரைகாலமிருந்த உற்பத்திப் பெறுமானங்களிலும் பார்க்க மிகக் கூடியதாக இருந்தது. இரப்பர் பொருட் கைத்தொழில்களில், ரயர்கள் புதுப்பித்தல் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டபொழுது, சைக்கிள் ரயர்களினதும், ரியூப்புக்களினதும் தயாரிப்பு ஏறக்குறைய 30 சதவீதத்தாற் குறைவுற்றது. இவ்வதிகரிப்பிற்கு, அவ்வாண்டின்போது சந்தையில் வெவ்வேறு காலங்களிற் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் கார் ரயர்களின் தட்டுப்பாடே, ஓரளவு காரணமாகும். கிளிசறினும் உட்பட மருந்துப் பொருட்களின் தயாரிப்பு 132 இலட்சம் ரூபாய்களாக மதிப்பிடப்பட்டது. இது 1963ஆம் ஆண்டு உற்பத்திப் பெறுமானத்திலும் பார்க்க 3 மடங்கிலும் கூடுதலாக விளங்கியது. அழகு சாதனங் களினது உற்பத்தியின் மேனோக்கிய போக்கு ஆண்டுதோறும் தொடர்ந்து ஏற்பட்டது. இவற்றின் உற்பத்திப் பெறுமானம், 1965ஆம் ஆண்டிற்குரிய 75 இலட்சம் ரூபாய்களி லிருந்து 1966ஆம் ஆண்டு 78 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1962ஆம் ஆண்டு உற்பத்தி அளவிலும் பார்க்க, நடைமுறை உற்பத்தி அளவு இரு மடங்கிலும் கூடிய தாகும். சவர்க்காரம், சுத்திகரக் கலவைகள் ஆகியனவற்றின் உற்பத்தியிலும் இதேமாதிரி யான போக்குக் காணப்பட்டது. இவற்றின் உற்பத்தியும் படிப்படியாக அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்தது. தற்போதைய உற்பத்தி அளவான 497 இலட்ச ரூபாய்களை, 1963ஆம் ஆண்டின் உற்பத்திப் பெறுமானமாகிய 340 இலட்ச ரூபாய்களுடன் ஒப்பு நோக்கலாம். தீப்பெட்டிகளினது உற்பத்தி ஒரு ஒழுங்கற்ற போக்கினைக் காட்டியது. 1962ஆம் ஆண்டில், இவற்றின் உற்பத்திப் பெறுமானம் 56 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1963ஆம் ஆண்டில் இவ்வுற்பத்திப் பெறுமானம், 45 இலட்சம் ரூபாய் களுக்கு வீழ்ச்சியுற்றதெனினும், 1965ஆம் ஆண்டில் இது 123 இலட்சம் ரூபாய் களுக்கு உயர்வுற்றது. 1966ஆம் ஆண்டில் இது, 87 இலட்சம் ரூபாய்களுக்குத்

## அட்டவணை II (ஆ) அ. 2

### கைத்தொழில் வகைகளின்படியும், பிரதான தயாரிப்புப் பொருட்களின்படியும்

| கைத்தொழில் தொகுதி | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
| **i. பல்வேறு உணவுத் தயாரிப்புகள்** | 147·8 | 147·6 | 160·7 | 109·2 | 134·5 |
| பண்ணைப் பொருட்கள் ... | 3·0 | 4·1 | 4·9 | 13·0 | 15·3 |
| கால்நடை, கோழித் தீன்கள் ... | 18·4 | 19·6 | 23·5 | 26·4 | 61·1 |
| தேங்காய்த் துருவல் ... | 11·4 | 11·0 | 13·2 | 62·2 | 49·7 |
| * உணவுக்கான எண்ணெய்களும், கொழுப்புகளும் ... | 110·7 | 109·0 | 114·4 | — | — |
| உப்பு ... | 0·7 | 0·4 | 0·5 | 1·5 | 5·1 |
| பனிக்கட்டி ... | 1·4 | 1·1 | 1·3 | 1·8 | 1·5 |
| ஏனையவை ... | 2·2 | 2·4 | 2·9 | 4·3 | 1·8 |
| **ii. தாவர எண்ணைகளும், கொழுப்புகளும்** ... | — | — | — | 190·4 | 142·3 |
| **iii. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் ஆகியன** ... | 2·3 | 3·4 | 3·8 | 5·4 | 5·1 |
| பழக்குழம்புகள், பழச்சாற்றுப்பசைகள், சுவைக்கூட்டுகள் முதலியன ... | 0·9 | 2·2 | 2·3 | 3·4 | 3·2 |
| ஏனையவை ... | 1·8 | 1·2 | 1·5 | 2·0 | 1·9 |
| **iv. விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்களற்றும், இனிப்புப் பதார்த்தங்களும்** ... | 21·9 | 28·8 | 30·9 | 34·9 | 38·6 |
| விஸ்கோத்துகள் ... | 12·7 | 15·7 | 16·4 | 14·8 | 19·6 |
| அவித்த இனிப்புப் பதார்த்தங்கள் ... | 5·1 | 6·6 | 5·5 | 7·6 | 9·6 |
| சொக்களற்றும், ரொப்பிகளும் ... | 1·3 | 3·1 | 5·5 | 10·0 | 7·0 |
| ஏனையவை ... | 2·8 | 3·4 | 3·5 | 2·5 | 2·4 |
| **v. பானங்களும், வாயுப்பானங்களும்** ... | 10·0 | 11·4 | 13·4 | 16·0 | 11·6 |
| **vi. பியரும் ஸ்ரவுட்டும்** ... | 2·2 | 2·4 | 2·7 | 7·6 | 5·5 |
| **vii. புகையிலை** ... | 35·0 | 39·0 | 46·2 | 52·0 | 52·3 |
| **viii. பின்னப்பட்ட துணிகளும் பொருட்களும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும், காலணி தவிர்ந்த ஏனைய ஆடை அணிகளும்** ... | 29·3 | 38·4 | 54·9 | 55·5 | 56·1 |
| சேட்டுகள் ... | 14·2 | 20·7 | 25·4 | 30·3 | 37·3 |
| ஏனையவை ... | 15·1 | 17·7 | 29·5 | 25·2 | 18·8 |
| **ix. நூற்றலும், நெய்தலும் துணிகளைச் சீராக்கலும்** ... | — | — | — | 91·3 | 95·1 |
| **x. காலணிகளும் தோற்பொருட்களும்** ... | 19·6 | 22·3 | 23·4 | 24·7 | 27·7 |
| **xi. காலணிகள் தவிர்ந்த இரப்பர் பொருட்கள்** ... | 10·9 | 13·7 | 17·0 | 19·1 | 18·9 |
| ரயர்கள் புதுப்பித்தல் ... | 6·8 | 9·1 | 11·0 | 11·1 | 11·9 |
| சைக்கிள் ரயர்களும், ரியூப்களும் ... | 2·6 | 2·7 | 4·2 | 4·9 | 3·4 |
| ஏனையவை ... | 1·5 | 2·0 | 1·8 | 3·1 | 3·6 |
| **xii. பல்வேறு இரசாயனப் பொருட்கள்** ... | 51·5 | 56·0 | 73·7 | 91·2 | 101·9 |
| மருந்துப் பொருட்கள் (கிளிசறினும் உட்பட) ... | 1·9 | 4·2 | 5·2 | 9·5 | 18·2 |
| அழகு சாதனங்கள் ... | 3·5 | 5·6 | 6·2 | 7·5 | 7·8 |
| சவர்க்காரமும், சுத்திகரக்கலவைகளும் ... | 35·1 | 34·0 | 39·0 | 47·6 | 49·7 |
| தீப்பெட்டிகள் ... | 5·6 | 4·5 | 10·3 | 12·3 | 8·7 |
| பற்பசை ... | 2·2 | 2·9 | 3·3 | 3·4 | 4·4 |
| ஏனையவை ... | 3·2 | 4·8 | 9·7 | 10·9 | 18·1 |
| **xiii. காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும்** ... | 15·4 | 18·2 | 30·1 | 29·3 | 33·8 |
| எழுத்து வேலைக்கான காகிதம் (பயிற்சிப் புத்தகங்கள் முதலிய உட்பட) ... | 6·8 | 8·9 | 12·1 | 10·4 | 14·2 |
| அச்சுவேலைக்கான காகிதம் ... | 4·2 | 3·1 | 3·9 | 3·8 | 4·5 |
| காகிதப் பெட்டிகளும், ஏனைய காகித அடைப்புப்பெட்டிகளும் | 0·7 | 1·7 | 4·6 | 5·9 | 3·1 |
| சுற்றுறைக் காகிதம் ... | 0·5 | 1·2 | 2·3 | 3·4 | 3·9 |
| ஏனையவை ... | 3·2 | 3·3 | 7·2 | 5·8 | 8·1 |
| **xiv. உலோகப் பொருட்கள்** ... | 11·2 | 15·1 | 38·5 | 44·7 | 49·0 |
| அலுமினியப் பொருட்கள் ... | 5·3 | 7·3 | 9·2 | 9·0 | 7·7 |
| உலோகப் பொருட்களிலான கலன்கள் ... | 2·7 | 2·1 | 4·9 | 9·3 | 8·5 |
| முட்கம்பி வடங்கள் ... | 0·7 | 1·1 | 3·0 | 3·1 | 3·5 |
| கம்பி ஆணிகள் ... | 1·8 | 2·7 | 3·9 | 3·8 | 2·9 |
| ஏனையவை ... | 0·7 | 1·9 | 17·5 | 19·5 | 26·4 |
| **xv. மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள் வழங்கிட்டுப் பொருட்கள் ஆகியன** ... | — | — | — | 14·0 | 20·8 |
| **xvi. தயாரிப்புப் பொருட்கள், (வேறிடத்திற் கூறப்படாதவை)** ... | 4·3 | 5·8 | 11·0 | 14·7 | 16·2 |
| பிளாஸ்டிக் பொருடகள் ... | 2·5 | 3·1 | 5·8 | 8·8 | 10·7 |
| ஏனையவை ... | 1·8 | 2·7 | 5·2 | 5·9 | 5·5 |
| **xvii. பீங்கான் பொருட்கள்** ... | 1·9 | 2·5 | 2·4 | 2·4 | 2·3 |
| **xviii. ஒட்டுப்பலகை** ... | 3·4 | 3·9 | 3·9 | 5·2 | 6·5 |
| **xix. கனிப்பொருள் மணல்கள்** ... | 0·1 | 0·1 | 0·9 | 1·3 | 1·4 |
| **xx. கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள்** ... | 1·1 | 1·2 | 1·0 | 1·6 | 1·9 |
| **xxi. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் அஸ்பெஸ்ரோஸ் பொருட்களும்** ... | 20·2 | 22·5 | 23·0 | 36·5 | 28·8 |
| **மொத்தம்** . | 388·0 | 432·4 | 537·5 | 847·0 | 850·3 |

குறிப்பு: 1965ம் ஆண்டுக்கான எண்தொகை, பகுப்பு IIன் கீழ் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

## வகுக்கப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம், 1962—66.

| அவ்வத்தொழிலின் சதவீதமாக | | | | | மொத்தக் கைத்தொழில் உற்பத்தியின் சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 38·1 | 34·2 | 29·9 | 12·8 | 15·7 |
| 2·0 | 2·8 | 3·0 | 11·9 | 11·4 | 0·8 | 0·9 | 0·99 | 1·5 | 1·8 |
| 12·4 | 13·3 | 14·6 | 24·2 | 45·4 | 4·7 | 4·5 | 4·4 | 3·1 | 7·2 |
| 7·7 | 7·5 | 8·2 | 57·0 | 37·0 | 2·9 | 2·5 | 2·5 | 7·3 | 5·8 |
| 74·9 | 73·8 | 71·2 | — | — | 28·5 | 25·2 | 21·3 | — | — |
| 0·5 | 0·3 | 0·3 | 1·4 | 3·8 | 0·2 | 0·1 | 0·1 | 0·2 | 0·6 |
| 0·9 | 0·7 | 0·8 | 1·6 | 1·1 | 0·4 | 0·3 | 0·2 | 0·2 | 0·2 |
| 1·5 | 1·6 | 1·8 | 3·9 | 1·3 | 0·6 | 0·6 | 0·5 | 0·5 | 0·2 |
| — | — | — | 100·0 | 100·0 | — | — | — | 22·5 | 16·7 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 0·6 | 0·8 | 0·7 | 0·6 | 0·6 |
| 39·1 | 64·7 | 60·5 | 63·0 | 62·7 | 0·2 | 0·5 | 0·4 | 0·4 | 0·4 |
| 61·8 | 35·2 | 39·5 | 37·0 | 37·3 | 0·3 | 0·3 | 0·3 | 0·2 | 0·2 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 5·6 | 6·7 | 5·7 | 4·1 | 4·5 |
| 58·0 | 54·5 | 53·1 | 42·4 | 50·8 | 3·3 | 3·6 | 3·0 | 1·7 | 2·3 |
| 23·3 | 22·9 | 17·8 | 21·8 | 24·0 | 1·3 | 1·5 | 1·0 | 0·9 | 1·1 |
| 5·9 | 10·8 | 17·2 | 28·6 | 18·1 | 0·3 | 0·7 | 1·0 | 1·2 | 0·8 |
| 12·8 | 11·8 | 11·3 | 7·2 | 6·2 | 0·7 | 0·8 | 0·7 | 0·3 | 0·3 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 2·6 | 2·6 | 2·5 | 1·9 | 1·4 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 0·6 | 0·6 | 0·5 | 0·9 | 0·6 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 9·0 | 9·0 | 8·6 | 6·1 | 6·2 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 7·6 | 8·9 | 10·2 | 6·6 | 6·6 |
| 48·5 | 53·9 | 46·3 | 54·6 | 66·5 | 3·7 | 4·8 | 4·7 | 3·6 | 4·4 |
| 51·5 | 46·3 | 53·7 | 45·4 | 33·5 | 3·9 | 4·1 | 5·5 | 3·0 | 2·2 |
| — | — | — | 100·0 | 100·0 | — | — | — | 10·8 | 11·2 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 5·1 | 5·2 | 4·3 | 2·9 | 3·3 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 2·8 | 3·2 | 3·2 | 2·3 | 2·2 |
| 62·4 | 66·4 | 64·7 | 58·1 | 63·0 | 1·8 | 2·1 | 2·0 | 1·3 | 1·4 |
| 23·9 | 19·7 | 24·7 | 25·7 | 18·0 | 0·7 | 0·6 | 0·8 | 0·6 | 0·4 |
| 13·8 | 14·6 | 10·6 | 16·2 | 19·0 | 0·4 | 0·5 | 0·3 | 0·4 | 0·4 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 13·3 | 13·0 | 13·7 | 10·8 | 12·0 |
| 3·7 | 7·5 | 7·1 | 10·4 | 13·0 | 0·5 | 1·0 | 1·0 | 1·1 | 1·6 |
| 6·8 | 10·0 | 8·4 | 8·2 | 7·7 | 0·9 | 1·3 | 1·2 | 0·9 | 0·9 |
| 68·2 | 60·7 | 52·9 | 52·2 | 48·8 | 9·0 | 7·9 | 7·2 | 5·6 | 5·8 |
| 10·9 | 8·0 | 14·0 | 13·6 | 8·5 | 1·4 | 1·0 | 1·9 | 1·5 | 1·0 |
| 4·3 | 5·2 | 4·5 | 3·7 | 4·3 | 0·6 | 0·7 | 0·6 | 0·4 | 0·5 |
| 6·2 | 8·6 | 13·2 | 12·0 | 17·7 | 0·8 | 1·1 | 1·8 | 1·3 | 2·1 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 4·0 | 4·2 | 5·6 | 3·4 | 4·0 |
| 44·2 | 48·9 | 40·2 | 35·5 | 42·0 | 1·8 | 2·1 | 2·2 | 1·2 | 1·7 |
| 27·3 | 17·0 | 13·0 | 13·0 | 13·3 | 1·1 | 0·7 | 0·7 | 0·4 | 0·5 |
| 4·5 | 9·3 | 15·3 | 20·1 | 9·2 | 0·2 | 0·4 | 0·9 | 0·7 | 0·4 |
| 3·2 | 6·6 | 7·6 | 11·6 | 11·5 | 0·1 | 0·3 | 0·4 | 0·4 | 0·5 |
| 20·8 | 18·1 | 23·9 | 19·8 | 24·0 | 0·8 | 0·8 | 1·3 | 0·7 | 1·0 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 2·9 | 3·5 | 7·2 | 5·3 | 5·8 |
| 47·3 | 48·3 | 23·9 | 20·1 | 15·7 | 1·4 | 1·7 | 1·7 | 1·1 | 0·9 |
| 24·1 | 13·9 | 12·7 | 20·8 | 17·3 | 0·7 | 0·5 | 0·9 | 1·1 | 1·0 |
| 6·3 | 7·3 | 7·8 | 7·0 | 7·2 | 0·2 | 0·3 | 0·6 | 0·4 | 0·4 |
| 16·1 | 17·9 | 10·1 | 8·5 | 5·9 | 0·5 | 0·6 | 0·7 | 0·4 | 0·3 |
| 6·3 | 12·6 | 45·5 | 43·6 | 53·9 | 0·2 | 0·4 | 3·3 | 2·3 | 3·1 |
| — | — | — | 100·0 | 100·0 | — | — | — | 1·7 | 2·4 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 1·1 | 1·3 | 2·0 | 1·7 | 1·9 |
| 58·1 | 53·4 | 52·7 | 59·9 | 66·0 | 0·6 | 0·7 | 1·1 | 1·0 | 1·3 |
| 41·9 | 46·6 | 47·3 | 40·1 | 34·0 | 0·5 | 0·6 | 1·0 | 0·7 | 0·6 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 0·5 | 0·6 | 0·4 | 0·3 | 0·3 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 0·9 | 0·9 | 0·7 | 0·6 | 0·8 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | ... | ... | 0·2 | 0·2 | 0·2 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 0·3 | 0·3 | 0·2 | 0·2 | 0·2 |
| 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 5·2 | 5·2 | 4·3 | 4·3 | 3·4 |
| | | | | | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

திரும்பவும் வீழ்ச்சியுற்றது. உலோகப் பொருட்களைப் பொறுத்தவரை, முட்கம்பி வடங்கள் தவிர்ந்த சகல பகுப்புக்களும், குறைவான உற்பத்தித் தொகைகளைக் காட்டின. அலுமினியப் பொருட்களிலேயே மிகக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்பட்டது. அலுமினியப் பொருட்களின் உற்பத்தி 90 இலட்சம் ரூபாய்களிலிருந்து 77 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. ஆனல் 1966ஆம் ஆண்டு உற்பத்தி அளவு 1963ஆம் ஆண்டிலும் பார்க்கக் கூடுதலாக விளங்கியது. கம்பி ஆணிகளின் உற்பத்தி 38 இலட்சம் ரூபாய்களிலிருந்து 29 இலட்சம் ரூபாய்களுக்கும், உலோகப் பொருட்களிலான கலன்களின் உற்பத்தி 93 இலட்சம் ரூபாய்களிலிருந்து 85 இலட்சம் ரூபாய்களுக்கும் வீழ்ச்சியுற்றன. பிளாஸ்டிக் பொருட்களாற் செய்யப்பட்ட தயாரிப்புப் பொருட்களின் உற்பத்தி 88 இலட்சம் ரூபாய்களிலிருந்து 107 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இவ்வுற்பத்தி 1962ஆம் ஆண்டிற்குரிய 25 இலட்ச ரூபாய்கள் மட்டத்திலிருந்து நிலையாக அதிகரித்துக் கொண்டுபோயது.

**மொத்த உற்பத்தியிற் கைத்தொழில்களின் ஒப்பியல்பான பங்குகள்**

**பிரதான கைத்தொழிற்றெகுதிகளுள் கைத்தொழில்களின் ஒப்பியல்பான நிலை.**

பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் என்ற தொகுதியுள், கால்நடை, கோழித்தீன் களின் ஒப்பியல்பான பங்கு, மொத்த உற்பத்தியில் 45·4 சதவீதமாக விளங்கியது. எனினும், 1965ஆம் ஆண்டிலே இவற்றின் பங்கு, 24·2 சதவீதமாக அமைந் திருந்தது. இப்பகுப்பில், 1965ஆம் ஆண்டு மொத்த உற்பத்தியில் 57·0 சதவீதமாக விளங்கிய தேங்காய்த் துருவல், 1966ஆம் ஆண்டு 37·0 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. பாற் பண்ணைப் பொருட்களின் ஒப்பியல்பான பங்கு மிகச் சிறியளவில் மாற்றமுற்றது. உப்பு உற்பத்தி அதிகரிப்புடன், இப்பகுப்பின் மொத்த உற்பத்தியில் உப்பினது பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 1·4 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டு 3·8 சதவீதத்திற்கு அதிகரித்தது. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்கள், மரக் கறிகள், இறைச்சி, மீன் ஏனைய கடல் உணவுகள், ஆகிய பிரதான பகுப்பில், பழக் குழம்புகள், பழச்சாற்றுப்பசைகள், சுவைக்கூட்டுகள் ஆகிய பகுப்புகளில், மிகச் சிறி தளவான மாற்றம் காணப்பட்டது. இவற்றின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 63·0 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டு 62·7 சதவீதமாக மிகச் சிறியளவிற் குறைவுற்ற பொழுது, இத்தொகுதியிலுள்ள ஏனைய பொருட்களின் பங்கு, 1965ஆம் ஆண்டிற் குரிய 37·0 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 37·3 சதவீதத்திற்குச் சிறிதளவாக அதிகரித்தது. விஸ்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும், இனிப்புப் பதார்த்தங் களும் ஆகிய பிரதான கைத்தொழிற்றெகுதியுள், விஸ்கோத்துக்களின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 42·4 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 50·8 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1962ஆம் ஆண்டு தொடக்கம், இப்பகுப்பின் உற்பத்திச் சதவீதத்தில் விஸ்கோத்துக்களினது உற்பத்தி, அவ்வாண்டிற்குரிய 58 சதவீதத்திலிருந்து 1965ஆம் ஆண்டு 42·4 சதவீதத்திற்குக் குறைவுற்று, ஆனல் அதன்பின் 50·8 சதவீதத்திற்கு உயர்வுற்றது. சொக்களற்றினதும், ரொப்பியினதும் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 28·6 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 18·1 சதவீதத்திற்குக் கூர்மையாக வீழ்ச்சியுற்றது.

பின்னிய துணிகள், பொருட்கள், அத்துடன் தைக்கப்பட்ட உடைகள் என்ற தொகுதியிற் சேட்டு உற்பத்தியின் பங்கு கடைசி மூன்று வருட காலத்திலும் தளராமல் அதிகரித்து, தற்பொழுது 66·5 சதவீதமாக அமைந்திருக்கின்றது. எனினும், இப் பகுப்பில், ஏனைய பொருட்களின் பங்கு 1965ஆம் ஆண்டிற்குரிய 45·4 சதவீதத்தி லிருந்து 1966ஆம் ஆண்டு 33·5 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இரப்பர்ப் பொருட்களில் (காலணிகள் தவிர்த்து) ரயர் புதுப்பித்தல், கைத்தொழிலினது உற்பத்திப் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 58·1 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 63·0 சதவீதத் திற்கு அதிகரித்ததெனினும், சைக்கிள் ரயர்களினதும், ரியூப்புகளினதும் பங்கு, 1965ஆம்

## அட்டவணை II (ஆ) அ—3

## கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம் (1962-66)

பிரதான பொருளாதாரப் பகுப்புக்களின்படி

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | | சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
| **(அ) நுகர்ச்சிப் பொருட்கள் ...** | **236·1** | **275·1** | **340·1** | **456·9** | **480·3** | **60·8** | **63·7** | **63·3** | **53·9** | **56·5** |
| உணவும், குடிவகையும் புகையிலையும் ... | 105·0 | 119·1 | 133·0 | 143·9 | 144·0 | 27·1 | 27·6 | 24·8 | 17·0 | 16·9 |
| பல்வேறு உணவுத் தயாரிப்புகள் (1) ... | 33·6 | 34·1 | 36·0 | 28·0 | 30·9 | 8·7 | 7·9 | 6·7 | 3·4 | 3·6 |
| பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன் மற்றும் கடல் உணவுகள் ஆகியன (2) ... | 2·3 | 3·4 | 3·8 | 5·4 | 5·1 | 0·6 | 0·8 | 0·8 | 0·6 | 0·6 |
| விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் ... | 21·9 | 28·8 | 30·9 | 34·9 | 38·6 | 5·6 | 6·7 | 5·7 | 4·1 | 4·5 |
| வாயுப்பானங்கள் ... | 10·0 | 11·4 | 13·4 | 16·0 | 11·6 | 2·6 | 2·6 | 2·5 | 1·9 | 1·4 |
| பியரும், ஸ்ரவுட்டும் ... | 2·2 | 2·4 | 2·7 | 7·6 | 5·5 | 0·6 | 0·6 | 0·5 | 0·9 | 0·6 |
| புகையிலை ... | 35·0 | 39·0 | 46·2 | 52·0 | 52·3 | 9·0 | 9·0 | 8·6 | 6·1 | 6·2 |
| உடைகள் (3) ... | 29·3 | 38·4 | 54·9 | 55·5 | 56·1 | 7·5 | 8·9 | 10·2 | 6·5 | 6·6 |
| காலணிகளும், தோற் பொருட்களும் ... | 19·6 | 22·3 | 23·4 | 24·7 | 27·7 | 5·0 | 5·2 | 4·3 | 2·9 | 3·3 |
| பல்வேறு இரசாயனப் பொருட்கள் (4) ... | 51·5 | 56·0 | 73·7 | 91·2 | 101·9 | 13·3 | 13·0 | 13·7 | 10·8 | 12·0 |
| காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் (5) ... | 10·0 | 12·2 | 19·2 | 16·2 | 22·3 | 2·6 | 2·8 | 3·6 | 1·9 | 2·6 |
| உலோகப் பொருட்கள் (6) ... | 5·3 | 7·3 | 9·2 | 9·0 | 7·7 | 1·4 | 1·7 | 1·7 | 1·0 | 0·9 |
| தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறிடத்திற் கூறப் படாதவை) (7) ... | 4·3 | 5·8 | 11·0 | 14·7 | 16·2 | 1·1 | 1·3 | 2·0 | 1·7 | 1·9 |
| பீங்கான் பொருட்கள் ... | 1·9 | 2·5 | 2·4 | 2·4 | 2·3 | 0·5 | 0·6 | 0·4 | 0·3 | 0·3 |
| இரப்பர் பொருட்கள் (8) ... | 9·2 | 11·5 | 13·3 | 8·0 | 7·0 | 2·4 | 2·7 | 2·5 | 1·0 | 0·8 |
| நூற்றலும் நெய்தலும், துணிகளைச் சீராக்குதலும் ... | — | — | — | 91·3 | 95·1 | — | — | — | 10·8 | 11·2 |
| **(ஆ) நடுத்தரமான பொருட்கள் ...** | **126·9** | **126·8** | **146·3** | **316·1** | **296·5** | **32·7** | **29·3** | **27·2** | **37·3** | **34·9** |
| பல்வேறு உணவுத் தயாரிப்புகள் (9) ... | 114·2 | 113·5 | 124·7 | 271·6 | 245·9 | 29·4 | 26·2 | 23·2 | 32·1 | 28·9 |
| உலோகப் பொருட்கள் (10) ... | 2·7 | 2·1 | 4·9 | 9·3 | 8·5 | 0·7 | 0·5 | 0·9 | 1·1 | 1·0 |
| காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் (11) ... | 5·4 | 6·0 | 10·9 | 13·1 | 11·5 | 1·4 | 1·4 | 2·0 | 1·5 | 1·4 |
| ஒட்டுப்பலகை ... | 3·4 | 3·9 | 3·9 | 5·2 | 6·5 | 0·9 | 0·9 | 0·7 | 0·6 | 0·8 |
| கனிப்பொருள் மணல்கள் ... | 0·1 | 0·1 | 0·9 | 1·3 | 1·4 | ... | ... | 0·2 | 0·2 | 0·2 |
| கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் (12) ... | 1·1 | 1·2 | 1·0 | 1·6 | 1·9 | 0·3 | 0·3 | 0·2 | 0·2 | 0·2 |
| மின்சாரப் பொருட்கள் ... | — | — | — | 14·0 | 20·8 | — | — | — | 1·6 | 2·4 |
| **(இ) முதலீட்டப் பொருட்கள் ...** | **25·1** | **30·4** | **51·1** | **74·0** | **73·5** | **6·5** | **7·0** | **9·5** | **8·7** | **8·6** |
| உலோகப் பொருட்கள் (13) ... | 3·2 | 5·7 | 24·4 | 26·4 | 32·8 | 0·8 | 1·3 | 4·5 | 3·1 | 3·8 |
| இரப்பர் பொருட்கள் (14) ... | 1·7 | 2·2 | 3·7 | 11·1 | 11·9 | 0·4 | 0·5 | 0·7 | 1·3 | 1·4 |
| சீமெந்தும் சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... | 20·2 | 22·5 | 23·0 | 36·5 | 28·8 | 5·2 | 5·2 | 4·3 | 4·3 | 3·4 |
| **மொத்தம் ...** | **388·0** | **432·0** | **537·5** | **847·0** | **850·3** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்புகள் :

1. பாற்பண்ணைப் பொருட்களும், ஐஸ்கிரீமும், உப்பும்.
2. பழக்குழம்புகள், பழச்சாற்றுப் பசைகள், சுவைக்கூட்டுகள், பழங்களினால் செய்த தீம்பானங்கள் முதலியன.
3. சேட்டுகள், பனியன்கள் முதலியன.
4. மருந்துப் பொருட்கள், அழகுச் சாதனங்கள், சவர்க்காரமும், சுத்திகரக் கலவைகளும், தீப்பெட்டிகள், பற்பசை முதலியன.
5. எழுத்து வேலைக்கான காகிதம், பயிற்சிப் புத்தகங்கள் முதலியன.
6. அலுமினியப் பொருட்கள்.
7. பிளாஸ்ரிக் பொருட்கள் முதலியன.
8. சயிக்கிள் ரயர்களும் ரியூப்களும், விளையாட்டுப் பொருட்களும், வீட்டுத் தேவைக்கான பொருட்களும்.
9. கால்நடை உணவும், கோழித்தீனும், எண்ணைகளும். கொழுப்புகளும், ஐஸ், தேங்காய்த் துருவல் முதலியன.
10. கலங்கள்.
11. அச்சு வேலைக்கான காகிதமும், காகிதப் பெட்டிகளும், சுற்றுறைக் காகிதமும்.
12. எரிசோடாவும் குளோரினும்.
13. முட்கம்பி, கம்பி ஆணிகள், நாகம் பூசிய பொருட்கள் முதலியன.
14. ரயர்கள் புதுப்பித்தல்.

ஆண்டிற்குரிய 25·7 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 18·0 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இத் தொகுதிக்குரிய ஏனைய கைத்தொழில்களின் சதவீதப் பங்கு, 16·2 சதவீதத்திலிருந்து 19·0 சதவீதத்திற்கு உயர்வுற்றது.

பல்வேறு இரசாயனப் பொருட்கள் என்ற பகுப்பில், மருந்துப் பொருட்களின் 1965ஆம் ஆண்டிற்குரிய 10·4 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டு 13·0 சதவீதத்திற்கு அதிகரித்தபொழுது, அழகு சாதனங்கள், சவர்க்காரமும் சுத்திகரக் கலவைகளும், தீப்பெட்டிகள் ஆகியன வீழ்ச்சியுற்றன. காகிதமும், காகித மட்டைப் பொருட்களும் என்ற தொகுதியில், எழுத்து வேலைக்கான காகிதத்தின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 35·5 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 42·0 சதவீதத்திற்கு அதிகரித்த பொழுது, அச்சு வேலைக்கான காகிதத்தினதும், அடைப்புக் காகிதத்தினதும், பங்கு ஏறக்குறைய மாற்றமுறாதிருந்தது. அடைப்புப் பெட்டிகளினதும், ஏனைய காகித அடைப்புப் பெட்டிகளினதும் உற்பத்தியின் ஒப்பியல்பான பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 20·1 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டில் 9·2 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றது. உலோகப் பொருட்களின் தொகுதியில் அலுமினியப் பொருட்கள், உலோகப் பொருட்களிலான கலன்கள், கம்பி ஆணிகள் ஆகியவற்றின் ஒப்பியல்பான பங்குகள் வீழ்ச்சியுற்றபொழுது, ஏனைய உலோகப் பொருட்களின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 43·6 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 53.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**மொத்த உற்பத்தியின் சதவீதமாக ஒவ்வொரு கைத்தொழிலினதும் உற்பத்தி**

அட்டவணை 11 (ஆ) அ 2 இன் மூன்றாம் பிரிவுக்கோடுள் கொடுக்கப்பட்ட தரவுகள், மொத்த உற்பத்திக்கு மிகவும் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு கைத்தொழிற் பகுப்பினதும் பங்கினைக் காட்டுகின்றன. இத் தரவுகள், ஒவ்வொரு கைத்தொழிலினதும் சுருக்க அல்லது விரிவு ஒப்பியல்வு வீதத்தையும், கைத்தொழிற்றுறையில் ஒவ்வொரு தொகுதியினதும் ஒப்பியல்பான நிலையினையும் காட்டுகின்றன. மொத்தக் கைத்தொழில் உற்பத்தியிற் பல்வேறு உணவுத் தயாரிப்புகள், 1965ஆம் ஆண்டு 12·8 சதவீதமாக விளங்கியதற்கெதிராக, 1966ஆம் ஆண்டு 15·7 சதவீதமாக விளங்கின. இத் தொகுதியுள், கால்நடை, கோழித்தீன்கள், 1965ஆம் ஆண்டின் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 3.1 சதவீதமாக விளங்கியமைக்கெதிராக இவ்வாண்டு 7·2 சதவீதமாக விளங்கின. தேங்காய்த்துருவல் 1965ஆம் ஆண்டில் 7·3 சதவீதமாக விளங்கியதற்கெதிராக, 1966ஆம் ஆண்டு 5·8 சதவீதமாக விளங்கியது. மொத்தக் கைத்தொழிலுற்பத்தியிலே தாவர எண்ணெய்களினதும், கொழுப்புகளினதும் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 22·5 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 16·7 சதவீதத்திற்குக் குறைவுற்றது. விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்களற்றும் இனிப்புப் பதார்த்தங்களும், மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 4·5 சதவீதமாக விளங்கின. இத்தொகுதியுள், விஸ்கோத்துக்கள் 1965ஆம் ஆண்டில் 1·7 சதவீதமாக விளங்கியமைக்கெதிராக, 1966ஆம் ஆண்டு 2·3 சதவீதமாக விளங்கின. புகையிலை உற்பத்திப் பொருட்கள், மொத்தக் கைத்தொழிலுற்பத்தியில், 6·2 சதவீதத்திற்கு வகை கூறின. மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில், சேட்டுக்கள் 4·4 சதவீதமாகவும் ஏனைய தைக்கப்பட்ட உடைகள் 2·2 சதவீதமாகவும், நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்குதல் 11·2 சதவீதமாகவும் விளங்கின. பல்வேறு இரசாயனப் பொருட்கள், மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 1965ஆம் ஆண்டு 10·8 சதவீதத்திற்கு வகைகூறியதற்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 12·0 சதவீதத்திற்கு வகை கூறின. இத்தொகுதியுள் சவர்க்காரமும், சுத்திகரக் கலவைகளும் மொத்த உற்பத்தியிற் பிரதான பங்கிற்கு வகை கூறின. இவை 1965ஆம் ஆண்டில் 5·6 சதவீதமாக அமைந்தமைக்கெதிராக 1966ஆம் ஆண்டில் 5·8 சதவீதமாக அமைந்தன. மொத்த உற்பத்தியில், காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும், 1965ஆம் ஆண்டில் 3·4 சதவீதமாக விளங்கி

## அட்டவணை II (ஆ) அ—4

## அளவு அமைப்பின்படி, 1966ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் உற்பத்திப் பெறுமானத்தின் அடிப்படையில்

| கைத்தொழில் தொகுதி | | 250,000 ரூபாய்களுக்கு கீழ்ப்பட்டவை | 250,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும், 20 இலட்சம் ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 20 இலட்சம் ரூபாய்களுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | | கிடைக்கவில்லை | | |
| II. தாவர எண்ணெய்களும், கொழுப்புகளும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | | கிடைக்கவில்லை | | |
| III. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப் பட்டதுமான பழங்களும், மரக்கறிகளும், இறைச்சி, மீன் மற்றும் ஏனைய கடல் உணவுகளும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 21<br>26·7 | 5<br>73·3 | — | 26<br>100 |
| IV. விஸ்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும் இனிப்புப் பதார்த்தங்களும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 38<br>9·3 | 16<br>29·9 | 4<br>60·8 | 58<br>100 |
| V. குளிர் பானங்களும், வாயுப்பானங்களும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 16<br>10·0 | 5<br>35·3 | 1<br>54·7 | 22<br>100 |
| VI. பியரும் ஸ்ரவுட்டும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | — | — | 2<br>100 | 2<br>100 |
| VII. புகையிலை ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | | கிடைக்கவில்லை | | |
| VIII. பின்னிய துணிகளும், பொருட்களும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும், காலணி தவிர்ந்த ஏனைய ஆடையணிகளும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 87<br>11·9 | 31<br>37·1 | 5<br>51·0 | 123<br>100 |
| IX. நூற்றலும், நெய்தலும், துணிகளைச் சீராக்குதலும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 52<br>3·3 | 21<br>13·2 | 8<br>83·5 | 81<br>100 |
| X. காலணிகளும், தோற்பொருட்களும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 37<br>9·7 | 5<br>11·5 | 3<br>78·8 | 45<br>100 |
| XI. காலணிகள் தவிர்ந்த இரப்பர் பொருட்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 7<br>3·4 | 11<br>31·3 | 3<br>65·3 | 21<br>100 |
| XII. பல்வேறு இரசாயனப் பொருட்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 85<br>6·9 | 26<br>22·0 | 8<br>71·1 | 119<br>100 |
| XIII. காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 29<br>8·6 | 24<br>37·2 | 1<br>54·2 | 54<br>100 |
| XIV. உலோகப் பொருட்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 71<br>12·2 | 35<br>45·8 | 7<br>42·0 | 113<br>100 |
| XV. மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் ஆகியன ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 14<br>4·6 | 15<br>61·2 | 2<br>34·2 | 31<br>100 |
| XVI. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறிடத்திற் கூறப்படாதவை) ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 63<br>26·5 | 18<br>73·5 | — | 81<br>100 |
| XVII. பீங்கான் பொருட்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | — | — | 1<br>100 | 1<br>100 |
| XVIII. ஒட்டுப் பலகை ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | — | — | 1<br>100 | 1<br>100 |
| XIX. கனிப்பொருள் மணல்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | — | 1<br>100 | — | 1<br>100 |
| XX. கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | — | 1<br>100 | — | 1<br>100 |
| XXI. சீமெந்தும், சீமெந்துப் பொருட்களும் அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 7<br>1·8 | 1<br>5·9 | 3<br>92·3 | 11<br>100 |
| மொத்தம் ... | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியின் சதவீதமாக | 527<br>7·8 | 215<br>28·6 | 49<br>63·6 | 791<br>100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

யமைக்கெதிராக, இவ்வாண்டு 4·0 சதவீதமாக விளங்கின. எழுத்து வேலைக்கான காகிதத்தின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 1·2 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 1·7 சதவீதத்திற்கு உயர்வுற்றது. கைத்தொழிலுற்பத்தியில் உலோகப் பொருட்களின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 5·3 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 5·8 சதவீதத்திற்கு உயர்வுற்றபொழுது, மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் ஆகியன, 1965ஆம் ஆண்டிற்குரிய 1·7 சதவீதத்திலிருந்து, 1966ஆம் ஆண்டு 2·4 சதவீதத்திற்கு உயர்வுற்றன. சீமெந்து, சீமெந்துப் பொருட்கள், அஸ்பெஸ்ரோஸ் பொருட்கள் ஆகியனவற்றின் பங்கு, 4·3 சதவீதத்திலிருந்து 3·4 சதவீதத்திற்குக் குறைவுற்றது.

மொத்த உற்பத்தியில், நுகர்ச்சி, நடுத்தர, முதலீட்டப் பொருட்கள் எனப் பகுக்கப் பட்டுள்ள பிரதான கைத்தொழிற் பகுப்புக்களினது ஒப்பியல்பான பங்குகளை, அட்டவணை II (ஆ) அ 3 காட்டுகின்றது.

1966ஆம் ஆண்டில், நுகர்ச்சிப் பொருட்களின் ஒப்பியல்பான பங்கு 53·9 சதவீதத் திலிருந்து 56·5 சதவீதத்திற்கு அதிகரித்தபொழுது, நடுத்தரப் பொருட்கள் 37·3 சதவீதத்திலிருந்து 34·9 சதவீதத்திற்கும், முதலீட்டப் பொருட்கள், 1965ஆம் ஆண்டிற் குரிய 8·7 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 8·6 சதவீதத்திற்கும் குறைவுற்றன. நுகர்ச்சிப் பொருட் பகுப்பில், இத்தொகுதியினுள் அடங்கும் பொருட்களினது ஒப்பியல் பான பங்குகளின் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கனவாக அமைந்திருக்கவில்லை. ஆயினும் இப்பகுப்பிலுள்ளதான, பல்வேறு இரசாயனப் பொருட்கள், 10·8 சதவீதத்திலிருந்து 12·0 சதவீதத்திற்கும் காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும், 1·9 சதவீதத்திலிருந்து 2·6 சதவீதத்திற்கும் அதிகரித்தன. அநேகமான ஏனைய பகுப்புக்கள் சிறிதளவு குறை வுற்றோ அல்லது மாற்றமுறாதோ இருந்தன. நடுத்தரப் பொருட்களின் வீழ்ச்சிக்குப் பல்வேறு உணவுத் தயாரிப்புக்களின் பங்கு 32·1 சதவீதத்திலிருந்து 28·9 சதவீதத் திற்குக் குறைவுற்றமையே முக்கிய காரணமாகும். எனினும், இப்பகுப்பிலுள்ள ஏனைய விடயங்கள் அவ்வளவு மாற்றமுறவில்லை. மொத்த உற்பத்தியில், முதலீட்டப் பொருட் களது பங்கின் சிறிதளவான வீழ்ச்சிக்கு, சீமெந்து, சீமெந்துப் பொருட்கள், அஸ்பெஸ் ரோஸ் பொருட்கள், ஆகியனவற்றின் பங்கு, 1965ஆம் ஆண்டிற்குரிய 4·3 சதவீதத்தி லிருந்து, 1966ஆம் ஆண்டு 3·4 சதவீதத்திற்குக் குறைவுற்றதே காரணமாகும். ஆனல், இப்பகுப்பிலுள்ள உலோகப் பொருட்கள், இரப்பர் பொருட்கள் ஆகியனவற்றின் அதிகரிப்பு, மேற்கூறிய குறைப்பினை ஒரளவிற்கு ஈடுசெய்யப் போதுமாயிருந்தது.

**கைத்தொழில் கூறின் அளவு**

உற்பத்திப் பெறுமானத்தின்படி உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களின் அளவு அமைப்பினை அட்டவணை II (ஆ) அ 4 தருகின்றது. 1965ஆம் ஆண்டு தரவு தந்த 782 தொழில் நிலையங்களுக்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 791 தொழில்நிலையங்கள் தரவு தந்தன. இவற்றில், உற்பத்தியின் ஆண்டுப் பெறுமானம் 250,000 ரூபாய்களுக்குக் குறைவாகவுள்ள பகுப்பிலே, 1965ஆம் ஆண்டில் 540 தொழில்நிலையங்கள் இருந்தமைக் கெதிராக, 1966ஆம் ஆண்டு 527 தொழில்நிலையங்கள் இருந்தன. 250,000 ரூபாய் களுக்கும், 20 இலட்ச ரூபாய்களுக்குமிடையிலான உற்பத்தியைக் கொண்ட தொகுதியில், 1965ஆம் ஆண்டில் 188 தொழில்நிலையங்கள் இருந்தமைக்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 215 தொழில்நிலையங்கள் இருந்தன. 1965ஆம் ஆண்டு ஆண்டொன்றிற்கு 20 இலட்சம் ரூபாய்களுக்கு மேலதிகமாகவுள்ள உற்பத்தியையுடைய 54 தொழில் நிலையங்கள் இருந்தன. ஆனல் 1966ஆம் ஆண்டு இவற்றின் எண்ணிக்கை 49இற்குக் குறைவுற்றது. ஆண்டொன்றிற்கு 250,000 ரூபாய்களுக்கும், 20 இலட்சம் ரூபாய்களுக்கும் இடைப்பட்ட உற்பத்தியையுடைய தொகுதியிலேயே பிரதான மாற்றம் ஏற்பட்டிருந்தது. இதிலே தொழில்நிலையங்களின் எண்ணிக்கை 27ஆல் அதிகரித்துள்ளது. இவ்வதி

கரிப்பு, உற்பத்தி 250,000 ரூபாய்களுக்குக் குறைவாகவுள்ள தொழில்நிலையங்களின் எண்ணிக்கைக் குறைப்புடன் ஏற்பட்டுள்ளது. ஆண்டொன்றிற்கு உற்பத்திப் பெறுமானம் 20 இலட்சம் ரூபாய்களுக்குக் கூடுதலாகவுள்ள தொழில்நிலையங்களின் பங்கு, 1965ஆம் ஆண்டில் 66 சதவீதமாக விளங்கியதற்கெதிராக, 1966ஆம் ஆண்டு 63·6 சதவீதமாக விளங்கியது. 250,000 ரூபாய்களுக்கும் 20 இலட்ச ரூபாய்களுக்கும் இடைப்பட்ட உற்பத்திப் பெறுமானத்தையுடைய தொழில் நிலையங்களின் பங்கு 1965ஆம் ஆண்டில் 26 சதவீதமாக விளங்கியதற்கெதிராக, 1966ஆம் ஆண்டு 28·6 சதவீதமாக விளங்கியது. உற்பத்திப் பெறுமானம், 250,000 ரூபாய்களுக்குக் குறைவாகவுள்ள தொழில்நிலையங்களின் பங்கு 7.8 சதவீதமாக விளங்கியது.

1965ஆம் ஆண்டு, பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்களும், மாக்கறிகளும், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் என்ற தொகுதியில் 250,000 ரூபாய்களுக்கும் குறைவான உற்பத்திப் பெறுமானத்தையுடைய 29 தொழில் நிலையங்கள் மொத்த உற்பத்தியில் 35 சதவீதத்தைக் கொண்டிருந்தன. எனினும், 1966ஆம் ஆண்டிலே தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 21ற்குக் குறைவுற்றது. இவை மொத்த உற்பத்தியில் 26·7 சதவீதத்தை உற்பத்தி செய்தன. 250,000 ரூபாய்களுக்கும், 20 இலட்சம் ரூபாய்களுக்கும் இடையிலான உற்பத்தியையுடைய தொழில்நிலையங்களில், உற்பத்தியின் ஒப்பியல்புப் பங்குகளிற் குறிப்பிடத்தக்களவு மாற்றம் காணப்பட்டது. 1965ஆம் ஆண்டில் 3 தொழில்நிலையங்கள் உற்பத்தியில் 20 சதவீதத்தைக் காட்டிய பொழுது, 1966ஆம் ஆண்டில் 5 தொழில்நிலையங்கள் உற்பத்தியில் 73·3 சதவீதத்தைக் காட்டின. விஸ்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும், இனிப்புப் பதார்த்தங்களும் ஆகிய கைத்தொழிலிற் பெரிய கூறுகள் தொடர்ந்தும் பெருமளவிலிருந்தன. இக்கைத் தொழிலில், 1965ஆம் ஆண்டு 5 தொழில் நிலையங்கள் மொத்த உற்பத்தியில் 55 சதவீதத்திற்குக் காரணமாக அமைந்தமைக்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 4 தொழில் நிலையங்கள், மொத்த உற்பத்தியில் 60·8 சதவீதத்திற்குக் காரணமாக அமைந்தன. குளிர்பான, வாயுப்பானக் கைத்தொழிலில், 1965ஆம் ஆண்டு, 20 இலட்சம் ரூபாய்களுக்குக் கூடுதலான மொத்த உற்பத்தியையுடைய 5 தொழில்நிலையங்கள், உற்பத்திப் பொருட்களில் 76 சதவீதத்தைத் தயாரித்தபொழுது, 1966ஆம் ஆண்டு 20 இலட்சம் ரூபாய்களுக்கு மேலதிகமான உற்பத்தியையுடைய ஒரு தொழில்நிலையம், உற்பத்திப் பொருட்களில் 54·7 சதவீதத்தை உற்பத்தி செய்தது. இது, அவ்வாண்டின்போது, போட்டியாளர்களின் ஆதாய இழப்புப் பொறுப்பில், ஒரு தொழில்நிலையம் சந்தையில் மிகவும் கணிசமான அளவு பங்கைப் பெற்றுள்ளது என்பதைப் பிரதிபலிக்கின்றது. பின்னப்பட்ட துணிகள், பொருட்கள் அத்துடன் தைக்கப்பட்ட உடைகள் ஆகிய கைத் தொழிலில், 250,000 ரூபாய்களுக்குக் குறைவான உற்பத்தியையுடைய பெருமளவு சிறிய கூறுகள், 1966ஆம் ஆண்டில் 87ஆகவும், 1965இல் 76 ஆகவும் இருந்த பொழுதும், உற்பத்தியின் பெருமளவு பங்கு, 1965ஆம் ஆண்டில் 6 பெரிய கைத்தொழில்களிலும், 1966ஆம் ஆண்டு 5 பெரிய கைத்தொழில்களிலுமே தங்கியுள்ளன. இவை தற்போது மொத்த உற்பத்தியில் 51 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றன. நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்குதல் தொகுதியிலும் நிலைமை இதேமாதிரியாகும். 1965ஆம் ஆண்டில் 250,000 ரூபாய்கள் உற்பத்திக்குக் குறைவான 44 தொழில்நிலையங்கள் மொத்த உற்பத்தியில் 3 சதவீதப் பங்கைக் கொண்டிருந்தன. எனினும், 1966ஆம் ஆண்டில், இத்தொகுதியிலுள்ள 52 தொழில்நிலையங்கள், மொத்த உற்பத்தியில் 3·3 சதவீதத் தைக் கொண்டிருந்தன. 1965ஆம் ஆண்டில் 20 இலட்சம் ரூபாய்களுக்கு மேலதிகமான உற்பத்தியையுடைய இப்பகுப்பிலுள்ள 7 தொழில் நிலையங்கள் மொத்தத்தில் 87 சதவீதத்தை உற்பத்திசெய்தன. எனினும், 1966ஆம் ஆண்டில் இப்பகுப்பிலுள்ள 8 தொழில் நிலையங்கள், மொத்த உற்பத்தியில் 83·5 சதவீதத்தை உற்பத்திசெய்தன.

காலணிதோற் பொருள் உற்பத்திக் கைத்தொழிலில் ரூ. 20 இலட்சத்திற்கு மேற்பட்ட உற்பத்தித் தொகையினைக்கொண்ட 3 பிரதான தொழில்நிலையங்களின்

# அட்டவணை II (ஆ) அ—5

## அளவு அமைப்பின்படி, 1966ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் -- கூலிச் செலவின் அடிப்படையில்

| கைத்தொழில் தொகுதி | | 15,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவை | 15,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும் 50,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 50,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும் 500,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 500,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | | | |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் | கூலிச் செலவின் சதவீதமாக | | | கிடைக்கவில்லை | | |
| II. தாவர எண்ணெகளும், கொழுப்புகளும் ... | | | | கிடைக்கவில்லை | | |
| III. பழுதடையாமலும் கலனிடப்பட்டு வைக்கப்பட்டதுமான பழங்களும் மரக்கறிகளும், இறைச்சி, மீன், மற்றும் ஏனைய கடல் உணவு | | 17 | 8 | 1 | | 26 |
| களும் ... | ,, | 16·7 | 47·6 | 35·7 | — | 100 |
| IV. விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்களற்றும் இனிப்புப் | | 24 | 22 | 11 | 1 | 58 |
| பதார்த்தங்களும் ... | ,, | 5·4 | 21·6 | 37·4 | 35·6 | 100 |
| V. குளிர்பானங்களும் வாயுப் | | 10 | 6 | 4 | 2 | 22 |
| பானங்களும் ... | ,, | 2·2 | 7·1 | 21·6 | 69·1. | 100 |
| | | | | 1 | 1 | 2 |
| VI. பியரும், ஸ்ரவுட்டும் ... | ,, | — | — | 19·2 | 80·8 | 100 |
| VII. புகையிலை ... | ,, | | | கிடைக்கவில்லை | | |
| VIII. பின்னிய துணிகளும், பொருட்களும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும், காலணி தவிர்ந்த | | 57 | 38 | 25 | 3 | 123 |
| ஏனைய ஆடை அணிகளும் ... | ,, | 5·6 | 14·9 | 43·2 | 36·3 | 100 |
| IX. நூற்றலும், நெய்தலும், | | 37 | 24 | 16 | 5 | 81 |
| துணிகளைச் சீராக்குதலும் ... | ,, | 1·6 | 4·6 | 20·7 | 73·1 | 100 |
| X. காலணிகளும், தோற்பொருட் | | 25 | 11 | 7 | 2 | 45 |
| களும் ... | ,, | 3·0 | 6·1 | 19·5 | 71·4 | 100 |
| XI. காலணிகள் தவிர்ந்த இறப்பர் | | 2 | 9 | 10 | | 21 |
| பொருட்கள் ... | ,, | 0·3 | 14·3 | 85·4 | — | 100 |
| XII. பல்வேறு இரசாயனப் | | 59 | 36 | 21 | 3 | 119 |
| பொருட்கள் ... | ,, | 4·2 | 9·7 | 33·0 | 53·1 | 100 |
| XIII. காகிதமும், காகித, காகித | | 18 | 29 | 6 | 1 | 54 |
| மட்டைப் பொருட்களும் ... | ,, | 3·2 | 18·8 | 25·0 | 53·0 | 100 |
| | | 42 | 39 | 32 | | 113 |
| XIV. உலோகப் பொருட்கள் ... | ,, | 5·3 | 22·6 | 72·1 | — | 100 |
| XV. மின்சார இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், வழங் | | 10 | 7 | 14 | | 31 |
| கீட்டுப் பொருட்கள் ஆகியன ... | ,, | 3·0 | 6·7 | 90·3 | — | 100 |
| XVI. தயாரிக்கப்பட்ட பொருட்கள் | | 47 | 22 | 12 | | 81 |
| (வேறிடத்திற் கூறப்படாதவை) | ,, | 15·7 | 33·2 | 51·1 | 1 | 100 |
| XVII. பீங்கான் பொருட்கள் ... | ,, | — | — | — | 100 | |
| | | | | | | 1 |
| XVIII. ஒட்டுப் பலகை ... | ,, | — | — | — | 1 | 100 |
| | | | | 1 | 100 | 1 |
| XIX. கனிப்பொருள் மணல்கள் ... | ,, | — | — | 100 | — | 100 |
| | | | | | | 1 |
| XX. கைத்தொழிலுக்கான அடிப்படை | | | | | 1 | 100 |
| இரசாயனப் பொருட்கள் ... | ,, | — | — | — | 100 | 1 |
| XXI. சீமெந்தும், சீமெந்துப் பொருட் | | | | | | 100 |
| களும் அஸ்பெஸ்ரஸ் பொருட் | | 5 | 2 | 2 | 2 | 11 |
| களும் ... | ,, | 1·0 | 1·5 | 17·2 | 80·3 | 100 |
| | | 353 | 253 | 163 | 22 | 791 |
| மொத்தம் ... | ,, | 0·04 | 0·14 | 9·38 | 90·44 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பங்கானது, 1965, 1966ஆம் ஆண்டுகட்கிடையில் கிட்டத்தட்ட 78 சதவீதத்தில் மாற்றமுருது இருந்தது. இரப்பர்பொருள் உற்பத்திக் கைத்தொழிலின் (காலணி தவிர்ந்த) நிலைமையில் 1965, 1966ஆம் ஆண்டுகட்கிடையில் சிறிது மாற்றமேற்பட்டது. இக் கைத்தொழிலில், உற்பத்திப் பெறுமதி ரூ. 20 இலட்சத் திற்கு மிகுதியாக உள்ள 3 தொழில்நிலையங்கள், முழு உற்பத்தியில் 65·3 சதவீததத்தைக் கொண்டுள்ளவையாக இருந்தன.

பல்வேறு இரசாயனப்பொருட் கைத்தொழிலில் ரூ. 20 இலட்சத்திற்கு மேலான உற்பத்திப் பெறுமானத்தைக் கொண்டிருந்த 8 தொழில் நிலையங்கள், மொத்த உற்பத்தியில், 1965ஆம் ஆண்டின் 74 சதவீதத்திற்கு எதிராக, 1966ஆம் ஆண்டில் 71·1 சதவீதத்தை உற்பத்தி செய்தன. 1965ஆம் ஆண்டில். காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் என்னும் கைத்தொழிலில் ரூபா 20 இலட்சத்திற்கு மேலான உற்பத்தியுடனுள்ள இரு தொழில்நிலையங்கள், உற்பத்தியில் 42 சதவீதத்தை உற்பத்தி செய்தன. ஆனால் 1966ஆம் ஆண்டில் இப்பகுப்பில், 1 தொழில்நிலையம் மொத்த உற்பத்தியில், 54·2 சதவீதத்தை உற்பத்தி செய்தது. உலோகப் பொருட் கைத்தொழிலில், ரூ. 250,000ற்கும் ரூ. 20 இலட்சத்திற்கும் இடைப்பட்ட உற்பத்திப் பெறுமானத்தைக் கொண்ட 35 தொழில்நிலையங்கள், 1966ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் 45·8 சதவீதத்தைக் கொண்டிருந்தன. ஆனால், மின்சார இயந்திரம், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் என்னும் கைத்தொழிலிலே ரூ. 20 இலட்சத்திற்கு மேலான தொகுதியில் 1965ஆம் ஆண்டில் ஒரு கைத்தொழில் 26·0 சதவீதத்தைக் கொண்டிருந்ததற்கெதிராக, 1966ஆம் ஆண்டில் இரண்டு தொழில்நிலையங்கள் 34·2 சதவீதத்தைக் கொண்டிருந்தன. மின்சார இயந்திரம், இயந்திரக் கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் கைத்தொழிலில் ரூ. 250,000ற்கும் ரூ. 20 இலட்சத்திற்கும் இடைப்பட்ட உற்பத்திப் பெறுமானத்தைக் கொண்ட 15 கைத்தொழில்கள் 61·2 சதவீத உற்பத்தியைக் கொண்டிருந்தன. வேறிடத்தில் குறிப்பிடாத, தயாரிக்கப்பட்ட பொருட்களது பகுப்பில், 1965ஆம் ஆண்டிலோ அன்றி 1966ஆம் ஆண்டிலோ, ரூ. 20 இலட்சத்திற்கு மேற்பட்ட உற்பத்தியுடன் கூடிய ஒரு பெரிய கூறுகளும் இருக்கவில்லை. அதில், மொத்த உற்பத்தியிலே 73·5 சதவீதத்தை உற்பத்தி செய்த ரூ. 250,000ற்கும் ரூ. 20 இலட்சத்திற்கும் இடைப்பட்ட தொகையுடைய உற்பத்தியுடன் கூடிய 18 கூறுகளும், மொத்த உற்பத்தியில் 26·5 சதவீதத்தை உற்பத்தி செய்த, ரூ. 250,000ற்குக் குறைவான உற்பத்தியுடன் கூடிய 63 கூறுகளும் இருந்தன.

கூலிச் செலவின் அளவிற்கிணங்கப் பகுக்கப்பட்டதான, தொழில்நிலையங்களின் அளவு அமைப்பு, அட்டவணை II (ஆ) அ 5 இல் தரப்பட்டிருக்கின்றது. முந்திய வருடங்களில் எடுத்துக் காட்டியபடி, மொத்த உற்பத்தியே கைத்தொழில் நிலையங்களினது அளவிற்குக் கூடிய பொருத்தம் வாய்ந்த குறிகாட்டியாகும். இவ்வட்டவணை, கைத்தொழிற்றுறையினுல் ஏற்பாடு செய்யப்படும் கூலி வருமான உழைப்பிற்கான தகுதிகளின் சில குறிப்பீடுகளைத் தருவதற்காக இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தரவு, கூலி வருமான உழைப்பிற்கான ஆகக்கூடிய வாய்ப்புக்கள், 22 தொழில் நிலையங்களால் அளிக்கப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றது. இத் தொழில் நிலையங்களின் கூலிச் செலவு, ஆண்டொன்றுக்கு ரூ. 500,000ற்கு மிகுதியானதாகும். இவை, இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கைத்தொழிற்றெகுதிகளில் கொடுக்கப்பட்ட மொத்தக் கூலிகளில், 90·44 சதவீதத்திற்கு வகை கூறுகின்றன. ரூ. 50,000க்கும் ரூ. 500,000க்கும் இடைப்பட்ட தொகையைக் கொண்ட கூலிச்செலவுடன் கூடிய 163 கைத்தொழில்கள், கொடுக்கப்பட்ட மொத்தக் கூலிகளில் 9·38 சதவீதத்தைக் கொண்டிருக்கையில், 253 கைத்தொழில்கள், ரூ. 15,000ற்கும் ரூ. 50,000ற்கும் இடையான தொகையைக் கொண்ட கூலிச் செலவையும், மொத்தத்தில் 0·14 சதவீதத்தைக் கொண்ட கூலிக் கொடுப்பனவுகளையும் கொண்டுள்ளன. கைத்தொழில் நிலையங்களின் பெருந்தொகுதி, ரூ. 15,000ற்குக் குறைந்த கூலிச் செலவினைக் கொண்டிருந்தன. இப்பகுப்பில் 353 தொழில் நிலையங்கள் இருந்தன.

# அட்டவணை II (ஆ) அ—6

## உற்பத்தியும் மூலப்பொருட்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கைத்தொழிற் தொகுதி | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | மூலப் பொருட்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | உள்ளூர் | அந்நிய | மொத்தம் |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் ... | 29 | 57,078 | (73·7)<br>23,024 | (26·3)<br>8,198 | (100)<br>31,222 |
| II. தாவர எண்ணெகளும் கொழுப்புகளும் ... | | | கிடைக்கவில்லை | | |
| III. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் இறைச்சியும், மீனும் மற்றும் ஏனைய கடல் உணவுகளும் ... | 21 | 4,660 | (75·7)<br>1,946 | (24·3)<br>625 | (100)<br>2,571 |
| IV. விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்கலற்றும் இனிப்புப் பதார்த்தங்களும் ... | 50 | 37,243 | (42·5)<br>8,010 | (57·5)<br>10,843 | (100)<br>18,853 |
| V. குளிர்பானங்களும் வாயுப்பானங்களும் ... | 21 | 12,143 | (33·9)<br>2,188 | (66·1)<br>4,266 | (100)<br>6,454 |
| VI. பியரும் ஸ்ரவுட்டும் ... | 2 | 5,508 | — | (100)<br>2,465 | (100)<br>2,465 |
| VII. புகையிலை ... | | | கிடைக்கவில்லை | | |
| VIII. பின்னப்பட்ட துணிகளும், பொருட்களும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும், காலணி தவிர்ந்த ஏனைய ஆடை அணிகளும் | 114 | 55,008 | (37·1)<br>13,698 | (62·9)<br>23,253 | (100)<br>36,951 |
| IX. நூற்றலும், நெய்தலும், துணிகளைச் சீராக்குதலும் ... | 76 | 60,485 | (8·6)<br>2,085 | (91·4)<br>22,068 | (100)<br>24,153 |
| X. காலணிகளும் தோற்பொருட்களும் ... | 38 | 24,700 | (32·5)<br>2,724 | (67·5)<br>5,658 | (100)<br>8,382 |
| XI. காலணிகள் தவிர்ந்த இரப்பர் பொருட்கள் | 20 | 14,457 | (47·9)<br>2,360 | (52·1)<br>2,566 | (100)<br>4,926 |
| XII. பல்வேறு இரசாயனப் பொருட்கள் ... | 109 | 100,721 | (43·2)<br>20,115 | (56·8)<br>26,432 | (100)<br>46,547 |
| XIII· காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் ... | 48 | 32,423 | (36·1)<br>6,254 | (63·9)<br>11,055 | (100)<br>17,309 |
| XIV. உலோகப் பொருட்கள் ... | 106 | 45,196 | (5·9)<br>1,786 | (94·1)<br>28,609 | (100)<br>30,395 |
| XV. மின்சார இயந்திரங்களும், கருவிகள், துணைக்கருவிகள் வழங்கீட்டுப் பொருட்கள் ஆகியன ... | 30 | 20,771 | (16·8)<br>2,102 | (83·2)<br>10,387 | (100)<br>12,489 |
| XVI. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறு இடத்திற் கூறப்படாதவை) ... | 79 | 16,183 | (21·3)<br>2,078 | (78·7)<br>7,691 | (100)<br>9,769 |
| XVII. பீங்கான் பொருட்கள் ... | 1 | 2,297 | (98·3)<br>59 | (1·7)<br>1 | (100)<br>60 |
| XVIII. ஒட்டுப்பலகை ... | 1 | 6,517 | (84·4)<br>2,104 | (15·6)<br>390 | (100)<br>2,494 |
| XIX. கனிப்பொருள் மணல்கள் ... | | | கிடைக்கவில்லை | | |
| XX. கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் ... | | | கிடைக்கவில்லை | | |
| XXI. சீமெந்தும், சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் .. | 10 | 28,766 | (40·1)<br>2,230 | (59·9)<br>3,331 | (100)<br>5,561 |
| மொத்தம் .. | 755 | 524,156 | (35·6)<br>92,763 | (64·4)<br>167,838 | (100)<br>260,601 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அவற்றின் மொத்தக் கூலிச் செலவு ·04 சதவீதம் மட்டுமேயாகும். இக் கைத்தொழிற் பகுப்புகளின் பெருமளவான கூலிகள், குறைந்தளவு கூலி நிர்ணயிக்கும் முறையினுல் ஒழுங்கு படுத்தப்படுவதாற் கூலிச்செலவு அளவின் வேறுபாடுகளுக்கு ஒரே கைத்தொழிற்றெகுதிக்குள் இருக்கும் கைத்தொழில் நிலையங்களின் ஊழியர்களுக்களிக்கப்படும் கூலிகளின் வித்தியாசங்களிலும் பார்க்க, இக் கைத்தொழில்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்புரிவோர்களின் எண்ணிக்கை வித்தியாசமே, பிரதான காரணமாக அமையும்.

கூலிச்செலவுக் கருத்துப்படி, அட்டவணை II (ஆ) அ 5இன் சில முக்கிய கைத்தொழிற்றெகுதிகளிற், பெரிய கைத்தொழில் நிலையங்களே பெருமளவில் உள்ளனவாகத் தெரிகிறது. உதாரணமாக, மொத்தக் கூலிச் செலவிலே, விஸ்கோத்தும், கொக்கோவும், சொக்களற்றும் இனிப்புப் பதார்த்தங்களும் ஆகிய கைத்தொழிற் தொழில் நிலையம் 35·6 சதவீதத்திற்கும், குளிர்பானங்களிலும், வாயுப்பானங்களிலும் 2 தொழில் நிலையங்கள் 69·1 சதவீதத்திற்கும், பியரிலும், ஸ்ரவுட்டிலும் 1 தொழில் நிலையம் 80·8 சதவீதத்திற்கும் காலணி, தோற்பொருட்களில் 2 தொழில் நிலையங்கள் 71·4 சதவீதத்திற்கும், காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் ஆகிய கைத்தொழிலில் ஒரு தொழில் நிலையம் 53·0 சதவீதத்திற்கும், வகை கூறின. 1965, 1966ஆம் ஆண்டிற்கான தரவுகளின் ஒப்பியல்பு, தயாரிக்கும் கூறுகளின், கூலிச் செலவு அடிப்படையிலான அளவு அமைப்பிற், குறிப்பிடத்தக்க மாற்றம் எதனையும் காட்டவில்லை. பொது நியதிகளில், முந்திய மாதிரி அமைப்பே, கைத்தொழிலின் மொத்தக் கூலிச் செலவில் சிறிதளவு உயர்ந்த பங்கினைக் கொண்டிருக்கும் சில பெரிய கைத்தொழில் நிலையங்கள் நீங்கலாக, நிலவுகின்றது. இது, உற்பத்தியின் உயர்ந்தளவு மட்டத்தைப் பிரதிபலிப்பதான, ஒவ்வொரு கைத்தொழிற் கூறுகளிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையின் அதிகரிப்பை, அல்லது கூலி மட்டங்களின் அதிகரிப்பைக் குறிக்கலாம்.

**மூலப் பொருட்களின் பயன்பாடு**

தரவுகள் அனுப்பிய 1394 கைத்தொழில்களிலே 755 கைத்தொழில்கள் கைத்தொழில் மூலப் பொருட்களின் தோற்றம், பயன்பாடு மீதான தரவுகளைச் சமர்ப்பித்தன. 1966ஆம் ஆண்டில் 755 தொழில் நிலையங்களால் உபயோகிக்கப்பட்ட மூலப் பொருட்களின் மொத்தப் பெறுமதி ரூ. 2606 இலட்சமாகும். 1965ஆம் ஆண்டில் 1076 தொழில் நிலையங்கள், ரூ. 2212 இலட்சம் மதிப்பிடப்பட்ட மூலப் பொருட்களின் உபயோகத்தின் மீதான தரவுகளைச் சமர்ப்பித்தன. 1966ஆம் ஆண்டில் அந்நிய அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பெறுமதி ரூ. 1678 இலட்சமாக அல்லது 64·4 சதவீதமாகவும், உள்நாட்டு மூலப் பொருட்களின் பெறுமதி ரூ. 928 இலட்சமாக அல்லது 35·6 சதவீதமாகவும் இருந்தன. உள்நாட்டு மூலப்பொருட்களுக்கும், அந்நிய மூலப் பொருட்களுக்குமிடையில் செய்யப்பட்ட வேறுபாடு, முழுவதும் சரியானதல்ல. ஏனெனின், தயாரிப்பாளர்கள், தாம் உள்நாட்டுச் சந்தையிற் கொள்வனவு செய்யும் இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களை, உள்நாட்டு மூலப் பொருட்களெனவே அடிக்கடி பகுத்துக் கூறுவார்கள். எண்ணியபடி, இவ்வாண்டுப் பகுப்பு 1965ஆம் ஆண்டினதிலும் பார்க்கச் சிறந்ததாகும். ஏனெனின் அவ்வாண்டில் 57 சதவீத மூலப் பொருட்கள் அந்நிய மூலப் பொருட்களாகவும், 43 சதவீதம் உள்நாட்டு மூலப் பொருட்களாகவும் பகுக்கப்பட்டிருந்தது.

மிக அதிக அந்நிய மூலப் பொருட் பங்கினைக் கொண்ட கைத்தொழில்களில், பியரும், ஸ்ரவுட்டும் 100 சதவீதத்தையும், நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் 91·4 சதவீதத்தையும், உலோகப் பொருட்கள் 94·1 சதவீதத்தையும், மின்சார இயந்திரம், கருவிகள், துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள், 83·2 சதவீதத்தையும் வேறு இடத்திற் குறிப்பிடப்படாத தயாரிப்புப் பொருட்கள் 78·7 சதவீதத்தையும் அந்நிய மூலப் பொருட் பங்காகக் கொண்டுள்ளன. அதிகமான உள்நாட்டு மூலப் பொருட்களை உபயோகிக்கும் கைத்தொழில்களில், பல்வேறு உணவுத் தயாரிப்புகள் 73·7 சதவீதத்தையும்,

## அட்டவணை II (ஆ) அ—7

## உற்பத்தியும் எரிபொருளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கைத்தொழில் தொகுதி | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | உபயோகிக்கப்பட்ட எரிபொருள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மின் சாரம் | கரியும் வாயுவும் | பெற்றோலும் எண்ணெயும் | ஏனையவை | மொத்தம் |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் | 10 | 22,061 | 235 | — | 310 | — | 545 |
| II. தாவர எண்ணெகளும், கொழுப்புகளும் ... | | | கிடைக்கவில்லை | | | | |
| III. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் ஆகியன. ... | 10 | 2,705 | 15 | 2 | 15 | — | 32 |
| IV. விஸ்கோத்தும், கொக்கோவும் சொக்களற்றும், இனிப்புப் பதார்த்தங்களும் ... | 23 | 30,102 | 578 | 90 | 107 | 7 | 782 |
| V. பானங்களும் வாயுப் பானங்களும் | 7 | 8,194 | 74 | 37 | 13 | — | 124 |
| VI. பியரும் ஸ்ரவுட்டும் ... | 2 | 5,508 | 104 | — | 170 | — | 274 |
| VII. புகையிலை ... | | | கிடைக்கவில்லை | | | | |
| VIII. பின்னிய துணிகளும் பொருட்களும் அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும் காலணி தவிர்ந்த ஏனைய ஆடை அணிகளும் ... | 25 | 6,452 | 33 | — | 6 | 14 | 53 |
| IX. நூற்றலும், நெய்தலும், துணிகளைச் சீராக்குதலும் ... | 19 | 34,580 | 430 | 25 | 613 | 2 | 1‘070 |
| X. காலணிகளும், தோற்பொருட்களும் | 11 | 24,617 | 235 | 17 | 81 | — | 333 |
| XI. காலணி தவிர்ந்த இரப்பர் பொருட்கள் ... | 7 | 2,145 | 34 | 4 | 35 | — | 73 |
| XII. பல்வேறு இரசாயனப் பொருட்கள் | 29 | 27,091 | 152 | 21 | 14 | 10 | 197 |
| XIII. காகிதமும், காகித, காகித மட்டைப் பொருட்களும் ... | 12 | 3,266 | 22 | 4 | 1 | — | 27 |
| XIV. உலோகப் பொருட்கள் ... | 42 | 25,524 | 210 | 30 | 35 | — | 275 |
| XV. மின்சார இயந்திரங்கள், கருவிகள் துணைக்கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் ஆகியன ... | 10 | 9,991 | 108 | 89 | 12 | — | 209 |
| XVI. தயாரிப்புப் பொருட்கள் (வேறிடத்தில் கூறப்படாதவை) ... | 16 | 2,594 | 23 | 3 | 1 | — | 27 |
| XVII. பீங்கான் பொருட்கள் ... | 1 | 2,297 | 101 | — | 157 | — | 258 |
| XVIII. ஒட்டுப்பலகை ... | 1 | 6,517 | 169 | — | 55 | — | 224 |
| XIX. கனிப்பொருள் மணல்கள் ... | | | கிடைக்கவில்லை | | | | |
| XX. கைத்தொழிலுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் ... | | | கிடைக்கவில்லை | | | | |
| XXI. சிமெந்தும், சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ... | 2 | 23,376 | 1,709 | — | 2,923 | — | 4,632 |
| மொத்தம் ... | 227 | 237,020 | 4,232 | 322 | 4,548 | 33 | 9,135 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன் ,ஏனைய கடலுணவுகள் ஆகியன 75·7 சதவீதத்தையும், பீங்கான் பொருட்கள் 98·3 சதவீதத்தையும், ஒட்டுப்பலகை 84·4 சதவீதத்தையும் உள்நாட்டு மூலப் பொருட்களாகக் கொண்டுள்ளன.

**வேலை நிலை**

1966ஆம் ஆண்டில், 1394 கைத்தொழிற் கூறுகளிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையானது, 1965ஆம் ஆண்டின், 1381 கூறுகளின் 56,835 கொண்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கெதிராக, 61,418 ஆகும். பதிலளித்த கைத்தொழிற் கூறுகளின் எண்ணிக்கை 13 இனால் அதிகரிக்க, 4,583 இனால் அதிகரித்த ஊழியர்களின் எண்ணிக்கையானது, இவ்வாண்டின் கைத்தொழில் விரிவு, குறிப்பிடத்தக்களவு தொகையான வேலைவாய்ப்புகளை அளித்தது என்பதனைப் பிரதிபலிக்கிறது. 1965ஆம் 1966ஆம் ஆண்டுகளினது அளவைகளின் படுகை, ஏறக்குறைய ஒரேமாதிரி இருப்பதால், ஊழியர்களின் அதிகரிப்பிற்கு, படுகை அதிகரிப்பிலும்பார்க்க, அதிக தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டமையே காரணமாக அமையக்கூடும். தொழில் வாய்ப்புக்களின் அதிக நன்மைகள், நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல், உலோகப்பொருட்கள், புகையிலை, தவார எண்ணெய்களும் கொழுப்புக்களும், விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்களற்றும் சீனிப்பதார்த்தங்களும், ஆகிய கைத்தொழில்களிலே காணப்பட்டன. குளிர்பானங்களும் வாயுப்பானங்களும், இரப்பர்ப் பொருட்கள் (காலணி தவிர்ந்த) பல்வேறு இரசாயனப் பொருட்கள் ஆகிய கைத்தொழில்களில் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவுற்றது. சில விடயங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதும், ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை அதிகரித்திருந்தது. உதாரணமாகப் பல்வேறு உணவுத் தயாரிப்புக்களின் தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1965ஆம் ஆண்டின் 96இல் இருந்து 1966ஆம் ஆண்டு ரூ. 86ற்கு வீழ்ச்சியடைய, ஊழியர்களின் எண்ணிக்கை 3,622இலிருந்த 3,647ற்கு அதிகரித்தது. இதுபோலவே, விஸ்கோத்தும் கொக்கோவும், சொக்களற்றும் சீனிப்பதார்த்தங்களும் கைத்தொழிற்றொழில் நிலையங்களின் எண்ணிக்கை 65 இலிருந்து 58இற்கு வீழ்ச்சியுற, ஊழியர்களின் எண்ணிக்கை 2,927இலிருந்து 3,192இற்கு அதிகரித்தது. பியர், ஸ்ரவுட்தயாரிப்புக் கைத்தொழிலிற் புதிய தயாரிக்கும் ஆலை ஒன்று 1966ஆம் ஆண்டின் தரவினுள் சேர்க்கப்பட்டது. ஆனால் இது ஊழியர்களின் எண்ணிக்கையை 338 இலிருந்து 416ற்கு அதிகரிக்கச் செய்தது. புகையிலைக் கைத்தொழிலில் கூறுகளின் எண்ணிக்கை 460இலிருந்து 473ற்கு அதிகரிக்க, ஊழியர்களின் எண்ணிக்கை 8,235 இலிருந்து 8,905ற்கு அதிகரித்தது. பின்னிய துணிகள், பொருட்கள், தைத்த உடைகள் ஆகிய கைத்தொழிலில், பதிலளித்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1965ஆம் ஆண்டின் 110 இல் இருந்து 1966ஆம் ஆண்டு 123ற்கு அதிகரிக்க, ஊழியர்களின் எண்ணிக்கை 6,341இலிருந்து 6,916ற்கு அதிகரித்தது. நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் கைத்தொழிலில் தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 66இலிருந்து 81ற்கு அதிகரிக்க, ஊழியர்களின் எண்ணிக்கை 1965ஆம் ஆண்டின் 9,650 இலிருந்து 1966ஆம் ஆண்டு 11,904ற்கு அதிகரித்தது.

**உற்பத்தியும் கூலியும்**

ஆள்-வேலை நாட்களின் தொகை, 1965ஆம் ஆண்டின் 153 இலட்சத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 161 இலட்சத்திற்கு அதிகரித்தது. ஆள்-வேலை நாட்கள் தொகையானது, புகையிலை, நூற்றல், நெய்தல் துணிகளைச் சீராக்குதல் ஆகிய கைத்தொழில்களில் ஆண்டொன்றுக்கு 20 இலட்சத்திலும் பார்க்க அதிகரிக்க, பல்வேறு உணவுத் தயாரிப்புகள், பின்னிய துணிகள், பொருட்கள், தைத்த உடைகள், பல்வேறு இரசாயனப் பொருட்கள் ஆகிய கைத்தொழில்களில், இது, ஆண்டொன்றுக்கு 10 இலட்சத்திலும் பார்க்க அதிகரித்தது. இக் கைத்தொழில்களில் இவ் ஆண்டிற்கான மிகக்கூடிய எண்தொகை

யின் ஆள்-வேலை நாட்களைக் கொண்ட கைத்தொழில்களிலேயே, மிகக் கூடிய கூலிச் செலவும் காணப்படுகின்றது. இது ஓரளவிற்கு, கூலிக் கொடுப்பனவுகள், முக்கியமாக நாளாந்த அடிப்படையில் செய்யப்பட்டன என்பதைக் குறிக்கிறது.

பதிலளித்த தொழில் நிலையங்களின் மொத்தக் கூலிச் செலவுத்தொகை 1965ஆம் ஆண்டின் ரூ. 886 இலட்சத்திலிருந்து 1966ஆம் ஆண்டு ரூ. 974 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1965ஆம் ஆண்டின் ரூ. 190 இலட்சத்திற்கு எதிராக ரூ. 220 இலட்சத்தைக் கொண்ட மிகக் கூடிய கூலிச் செலவு புகையிலைக் கைத்தொழிலிற் காணப்பட்டது. நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் கைத்தொழிலின் கூலிச் செலவு, 1965ஆம் ஆண்டின் ரூ. 99 இலட்சத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 138 இலட்சத்திற்கும் பல்வேறு இரசாயனப் பொருட் கைத்தொழிலின் கூலிச் செலவு, 1965ஆம் ஆண்டின் 94 இலட்சத்திலிருந்து 1966ஆம் ஆண்டு 100 இலட்சத்திற்கும், அதிகரித்தன. இத்தரவு சில கைத்தொழில்களிலுள்ள கூலி மட்டங்களின் தொடர்பான சமமின்மையையும், காட்டுகின்றது. உதாரணமாக, பல்வேறு உணவுத் தயாரிப்புக் கைத்தொழிலில் 3647 ஊழியர்கள் ரூ. 54 இலட்சம் கூலி பெற்றனர். நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல், கைத்தொழிலில் 11904 ஊழியர்கள் ரூ. 138 இலட்சம் கூலி பெற்றனர். இதற்கு எதிராக, ஆகக்குறைந்தளவு கூலிகள் நீண்ட காலம் நிலைபெற்றிருந்த மற்றைய கைத்தொழில்களில், உதாரணமாக, ரூ. 220 இலட்சம் கொண்ட கூலிச் செலவினை 8905 ஊழியர்கள் பெற்ற புகையிலைக் கைத்தொழிலிலும், ரூ. 100 இலட்சம் பெற்ற 4704 ஊழியர்கள் கொண்ட பல்வேறு இரசாயனப் பொருட் கைத்தொழிலிலும், சராசரிக் கூலி மட்டங்கள் பாராட்டத்தக்களவு உயர்ந்திருந்தன.

ஆள்-வேலை நாட்கூலி, 1965ஆம் ஆண்டின் ரூ. 5·78இல் இருந்து 1966ஆம் ஆண்டு ரூ 6·04இற்கு அதிகரித்தது. ஆள்-வேலை நாட்கூலியானது, பின்னிய துணிகளும், பொருட்களும், அத்துடன் தைக்கப்பட்ட உடைகளும், உலோகப் பொருட்கள், ஒட்டுப் பலகை, சீமெந்தும், சீமெந்துப் பொருட்களும், அஸ்பெஸ்ரஸ் பொருட்களும் ஆகிய கைத்தொழில்களைத் தவிர்ந்த, ஏனைய அதிகமான கைத்தொழில்களில், கணிசமான அளவு அதிகரித்தது. ஆள்-வேலை நாட்கூலியானது, பியர்,ஸ்ரவுட் தயாரிக்கும் கைத்தொழிலில் ரூ. 8·22 இலிருந்து ரூ. 10·75ற்கும், மின்சார இயந்திரம், கருவிகள், துணைக் கருவிகள், வழங்கீட்டுப் பொருட்கள் கைத்தொழிலில் ரூ. 7·19 இலிருந்து ரூ. 9·25ற்கும், அதிகரித்தது. ஆகக் கூடிய ஆள்-வேலை நாட்கூலிகள், குளிர்பானம், வாயுப்பானம் (ரூ. 7·60), புகையிலை (ரூ. 8·80) காலணியும், தோற் பொருட்களும் (ரூ. 8·44) பீங்கான் பொருட்கள் (ரூ. 10·18) ஆகிய கைத்தொழில்களிற் பெறப்பட்டன. ஆகக் குறைந்த வருமானங்கள், பின்னிய துணிகளும் பொருட்களும் அத்துடன் தைத்த உடைகளும் என்னும் கைத்தொழிலும் (ரூ. 3·93), விஸ்கோத்தும், கொக்கோவும் சொக்களற்றும் சீனிப் பதார்த்தங்களும் என்னும் கைத்தொழிற்றொகுதிகளிலும் (ரூ. 3·67), பெறப்பட்டன. கடைசியாகக் கூறப்பட்ட தொகுதிகளிலே சென்ற ஐந்து ஆண்டு காலத்தில், ஆள்-வேலை நாட்கூலி பொதுவாக ரூ. 4/-ற்குக் குறைந்தளவான மட்டத்திலிருக்கும் போக்கைக் கொண்டிருந்தது.

**மின்சக்தியும் எரிபொருளும்**

மின்சக்தி எரிபொருள் பயன்பாட்டின் மீதான தரவுகளை, 1965ஆம் ஆண்டின் 221 தொழில் நிலையங்களுக்கு எதிராக, இவ்வாண்டில் 227 தொழில் நிலையங்கள் அனுப்பியுள்ளன. பயன்படுத்தப்பட்ட எரி பொருளின் பெறுமதி, 1965ஆம் ஆண்டின் ரூ. 50 இலட்சத்திற்கு எதிராக, இவ்வாண்டு ரூ. 91 இலட்சத்தைக் கொண்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட எரிபொருள் முழுச் செலவில், 45 சதவீதம் அல்லது ரூ. 42 இலட்சம் மின்சாரத்திற்கும், ரூ. 45 இலட்சம் பெற்றோலுக்கும் எண்ணெய்க்கும், ரூ. 322,000 நிலக்கரிக்கும், வாயுவுக்கும் செலவழிக்கப்பட்டன. 1965ஆம் ஆண்டில் மின்சாரத்தின் செலவு, ரூ. 26 இலட்சமாக அல்லது, பயன்படுத்தப்பட்ட எரிபொருளில் 51·5 சதவீதமாக

இருந்தது. பெற்ருேலும் எண்ணெயும் நிலக்கரியும், வாயுவும் ஆகியவற்றின் செலவுகள், முறையே, ரூ. 544,000 அல்லது 10·9 சதவீதமும், ரூ. 16 இலட்சமுமாக இருந்தன. மின்சக்தியின் மிகக் கூடிய அளவு பாவிப்பு, ரூ. 782,000 மதிப்பிடப்பட்ட மின்சக்தியைப் பயன்படுத்திய விஸ்கோத்தும் கோக்கோவும் சொக்களற்றும் சீனிப்பதார்த்தங்களும் ஆகிய கைத்தொழிலும் ரூ. 10 இலட்சம் மதிப்பிடப்பட்ட மின்சக்தியைப் பயன்படுத்திய நூற்றல், நெய்தல், துணிகளைச் சீராக்கல் கைத்தொழிலும் காணப்பட்டது. 1965ஆம், 1966ஆம் ஆண்டுகளுக்கான எண்தொகைகளுக்கிடையிலுள்ள வித்தியாசம், பாவிக்கப்பட்ட மின்சக்தித் தொகையின் முழு அதிகரிப்பையும் காட்டவில்லை. ஆனுல், அது முக்கியமாகக் கூடியளவு சரியான தகவலையும், சிறந்த படுகையையும் கொண்டுள்ளதாக அமைகின்றது.

## (ஆ) அரசாங்கத் துறை

### உற்பத்தி

1966ஆம் ஆண்டின் இறுதியில், பதினெட்டுக் கூட்டுத்தாபனங்களிற் பதினைந்து உற்பத்தியில் ஈடுபட்டிருக்கையில், ஏனைய மூன்றும் உற்பத்தியைத் தொடங்காதிருந்தன.[1] இவையாவன, இலங்கை அரசாங்க மா அரைத்தல் கூட்டுத்தாபனம், இலங்கை எஃகு கூட்டுத்தாபனம், இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் சீமெந்து உற்பத்தியானது 1965ஆம் ஆண்டின் 84,000 தொன்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 81,572 தொன்களுக்கு, 2428 தொன்களால் வீழ்ச்சியுற்றது. சென்ற பத்து ஆண்டுக்காலங்களில், இக் கூட்டுத்தாபனத்தின் சீமெந்து உற்பத்தி ஏற்ற இறக்கப் போக்கினைக் கொண்டிருந்தது. 1965ஆம் ஆண்டில் காங்கேசன்துறை தொழிற்சாலை மிகக் கூடியளவு உற்பத்தியை எய்தியது. அங்கு படிப்படியான உயர்ந்தளவு உற்பத்திப் போக்குக் காணப்படவில்லை. ஆனால் இந்நிலை 1967ஆம் ஆண்டு தொடக்கம் மாறுபடக்கூடியதாகத் தெரிகிறது. இங்கு புதிய தொரு சூளையையும், துணைக்கருவிச் சாதனங்களையும் 1966 யூனில் நிறுவியதால் உற்பத்தி ஆற்றல் இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. 1966ஆம் ஆண்டு நடுப்பகுதியிலே தொழிற்சாலை நிறுவிய காலம் தொடக்கம் இயங்கி வந்த பழைய சூளை அதன் பழுது பார்த்தலுக்கும், புதுப்பித்தலுக்கும் என நிறுத்தப்பட்டு புதிய சூளை சேவையிலிடப் பட்டது. புதிய இயந்திரம் அதன் இயக்கத்தைத் தொடங்கிய பின், அதில் ஏற்பட்ட இயந்திர உறுப்புக்களின் கோளாறு காரணமாக இவ்வாண்டில் உற்பத்தி வீழ்ச்சியுற்றது.

புதிய, பழைய சூளைகள் இரண்டும் 1967இல் சேவையில் இருக்கும் என எதிர்பார்க் கப்பட்டது. இதனால் சீமெந்து உற்பத்தியும் இருமடங்காதல் வேண்டும். 1966இல் காலியிலுள்ள இறுதியான அரைத்தல் நிரப்பல் செய்யும் இயந்திரம் ஆண்டொன்றுக்கு 100,000 தொன்கள் தொடக்க ஆற்றலுடன் முடிவாக்கப்பட்டது. காங்கேசன்துறைத் தொழில்களிலிருந்து வரும் சிமெந்துக் கட்டி மிகையை இவ்வியந்திரம், சீமெந்து செய்வதற்கு உபயோகிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. சீமெந்துக் கட்டி நிரம்பல்களைக் கிடைக்கப்பண்ணுவதில் கஷ்டங்கள் இருந்தன. ஏனெனின், இச் சீமெந்துக் கட்டியை படகு மூலம் கரையோரமாக ஏற்றி செல்லல் என்ற அடிப்படைத் திட்டம் இன்னமும் செயலாக்கப்படவில்லை.

கிழக்குப் பகுதிக் காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியானது 1965ஆம் ஆண்டின் 6696 தொன்களிலிருந்து, 1966ஆம் ஆண்டில் 9081 தொன்களுக்கு, 2385 தொன்களாற் பாராட்டத்தக்க முறையில் அதிகரித்தது. ஆலையின் மதிப்பிடப்பட்ட ஆற்றலை, 3750 தொன்களிலிருந்து, 1966ஆம் ஆண்டுவரை 9000 தொன்களுக்கு அதிகரிப்பது, இயந்திர ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துவது, என்பனவற்றைக் கொண்டதான, 1960ஆம் ஆண்டிலே தொடக்கப்பட்ட திட்டமே மேற் கூறிய உற்பத்தி அதிகரிப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது. இப்போது இவ்வாலை முழு ஆற்றலிலும் வேலை செய்கின்றது.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் இரு முக்கிய பொருட்களான எரிசோடா, பாசிகம் ஆகியவற்றின் உற்பத்திகள், 1966ஆம் ஆண்டில் முறையே, 956 தொன்களி லிருந்து 1049 தொன்களுக்கும், 265 தொன்களிலிருந்து 361 தொன்களுக்கும் அதிகரித்

---

1. இவற்றுள், இலங்கை எண்ணெ கொழும்பு கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கா சீனிக்கூட்டுத்தாபனம், கைத்தொழில் பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம், ஆகியவற்றிலிருந்து வேண்டப்பட்ட தரவு கிடைக்கப்பெறவில்லை.

## அட்டவணை II (ஆ) ஆ—1

### 1963-66ம் ஆண்டுகளுக்குரிய அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | உற்பத்தியின் கூறு | 1963ம் ஆண்டின் உற்பத்தி | 1964ம் ஆண்டின் உற்பத்தி | 1965ம் ஆண்டின் உற்பத்தி | 1966ம் ஆண்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|
| 1. இலங்கை சீமெந்துக் கூட்டுத் தாபனம் ... | தொன்கள் ... | 76,764 | 79,508 | 84,000 | 81,572 |
| 2. தேசிய ஆடைக் கூட்டுத்தாபனம்... | இருத்தல்கள் பருத்திநூல் யார்கள், | 1,956,976 | 2,184,559 | 2,412,227 | 2,356,964 |
| | பருத்தி ஆடைகள் ... | — | — | — | 2,809,578 |
| 3. ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனம்... | தொன்கள், சீனி ... | 1,467 | 1,958 | 3,273* | 2,553 |
| | தெளிவான கலன் திராவகம் ... | — | — | — | 833,994 |
| 4. கிழக்குப்பகுதி காகித ஆலைக் கூட்டுத்தாபனம்... | தொன்கள் ... | 5,340 | 6,451 | 6,696 | 9,081 |
| 5. பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம் ... | தொன்கள் எரிசோடா ... | 985 | 895 | 956 | 1,049 |
| | பாசிகம் ... | 270 | 230 | 265 | 361 |
| | உணவு உப்பு ... | — | — | — | 69 |
| 6. இலங்கை எண்ணை கொழுப்பு கூட்டுத் தாபனம் ... | தொன்கள்-தேங்காய் எண்ணை ... | 9,467 | 1,961 | 1,514 | வி.கி. |
| | தொன்கள்-தேங்காய் உணவு, விலங்கு, கோழிப் பண்ணை உணவுகள்... | 19,305 | 21,565 | 22,158 | வி.கி. |
| 7. இலங்கை பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம்... | தொன்கள், பீங்கான் பொருள் ... | 770 | 888 | 863 | 813 |
| 8. இலங்கை கனிப் பொருள் மணல் கூட்டுத்தாபனம்... | தொன்கள், இல்மனைற் ... | 5,020 | 45,503 | 50,350 | 53,254 |
| 9. இலங்கை தோற் பொருட் கூட்டுத் தாபனம் ... | குரோம், சதுர அடி... | 500,100 | 511,310 | 473,180 | 616,860 |
| | ஏனைய தோற் பதனீட்டுப் பொருட்கள் | 215,400 | 216,300 | 200,010 | 289,980 |
| | சப்பாத்துச் சோடிகள் | 162,700 | 168,430 | 188,200 | 224,190 |
| 10. இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத் தாபனம் ... | 3 சதுர அடி ஒட்டுப் பலகை ... | 13,558,000 | 12,215,658 | 13,969,144 | 18,800,000 |
| 11. தேசிய சிறு கைத் தொழில் கூட்டுத் தாபனம் ... | தளபாடங்கள் (ரூபா) | — | — | 4,360,000 | 4,428,317 |
| | ஓடுகளும், செங்கற்களும் (ரூ) ... | — | — | 1,557,951 | 2,533,056 |
| | ஆயுள்வேத மருந்துகள் ... | — | - | — | 600,000 |
| 12. தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்... | அந்தர் ... | — | — | 382,589 | 1,269,372 |
| 13. இலங்கை உரக் கூட்டுத்தாபனம்... | தொன்கள் ... | — | — | 92,057(¹) | 107,147(¹) |
| 14. இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம்... | | உற்பத்தியில் இல்லை | | | |
| 15. இலங்கை தேசிய இரும்புப் பொருள் கூட்டுத்தாபனம்... | | — | — | — | 360,000 |
| 16. இலங்கை தேசிய மா அரைத்தல் கூட்டுத்தாபனம் | | உற்பத்தியில் இல்லை | | | |
| 17. இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்... | | உற்பத்தியில் இல்லை | | | |

மூலம் : உரிய கூட்டுத்தாபனங்களிடமிருந்து பெற்ற தரவு.

* திருத்தியமைக்கப்பட்ட எண்தொகை.

(1) தற்போதையிலுள்ளபடியே, இக்கூட்டுத்தாபனம் எதுவித உரப்பொருளையும் உற்பத்தி செய்யவில்லை. ஆனல் இது அவற்றை இறக்குமதி செய்பவராகவும், விநியோகிப்பவராகவும் கடமை ஆற்றுகிறது.

துள்ளன. இதற்குக் கூடுதலாக, இக்கூட்டுத்தாபனம், 69 தொன்கள் கொண்ட உணவுக்கான உப்பினையும் உற்பத்தி செய்துள்ளது. பாசிக உற்பத்தியின் அதிகரிப்பு, இவ்வுற்பத்தியின் உள்நாட்டுத் தேவைகளின் அதிகரிப்பால் ஈடுசெய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட எரி சோடாவின் விற்பனவு விலையை உயர்த்தி, அத்துடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட எரிசோடாவினதும், இறக்குமதி செய்யப்பட்ட எரி சோடாவினதும் விலையைத் தொன் ஒன்றிற்கு ரூ. 925 ஆகக் கட்டுப்படுத்தியபின், இக்கூட்டுத்தாபனத்தால், எரிசோடா உற்பத்தியினை அதிகரிக்க முடிந்தது.

இலங்கைப் பீங்கான் பொருட்கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியானது, 863 தொன் களிலிருந்து 1966ஆம் ஆண்டில் 813 தொன்களுக்கு, 50 தொன்களால் வீழ்ச்சி யடைந்தது. இக்கூட்டுத்தாபனம், சீராக்கப்பட்ட உள்நாட்டுப் பீங்கான் பொருட்களை விட 1472 தொன்கள் கொண்ட சுத்தமாக்கப்பட்ட வெள்ளைக்களி மண்ணையும் உற்பத்தி செய்தது. உற்பத்தியின் சிறிதளவு வீழ்ச்சிக்கு, ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களிலும் சூளைகளைப் பழுது பார்த்தலுக்காக நிறுத்தியது, காரணமாக அமையும். வெள்ளைக் களிமண் சுத்தமாக்கும் இயந்திரத்தின் வெள்ளைக் களிமண் உற்பத்தி வெள்ளைக் களிமண்ணிற் கேள்வி குறைவாக இருப்பதால், அதன் ஆற்றல் அளவினைவிட 50 சதவீதமளவு குறைவாக இருக்கின்றது. சுத்தமாக்கப்பட்ட வெள்ளைக் களிமண்ணானது, பீங்கான் பொருட்கள், பூச்சிகொல்லி மருந்து தயாரிப்பு, காகிதக் கைத்தொழில் ஆகிய வற்றிற்கு மூலப் பொருளாகப் பாவிக்கப்படுகின்றது. இக்கைத்தொழில்களின் மூலப் பொருள் என்ற முறையிலே வெள்ளைக் களிமண்ணின் கேள்வி, ஏற்ற இறக்க நிலையான போக்கினைக் கொண்டிருந்தது. இதனால் சுத்தமாக்கும் இயந்திரம் அதன் மதிப்பிடப் பட்ட ஆற்றல்ளவிற்கு மிகவும் குறைவாகவே வேலைசெய்ய வேண்டியிருந்தது.

இலங்கைத் தோற் பொருட் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி, தோல், பல்வேறு தோலுற்பத்திகள், வகை செய்யப்பட்ட தோலுற்பத்திகள், பிளந்த குருமத் தோல் சப்பாத்துகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். 1966ஆம் ஆண்டிலே சப்பாத்து உற்பத்தி, 35990 சோடிகளால் 224190 சோடிகளுக்கு அதிகரித்தது. இது, ரூ. 36 இலட்சத்திற்கு மதிக்கப்பட்டுள்ளது. பின் கூறப்பட்டது, இக் கூட்டுத்தாபனத்தின் முழு உற்பத்திப் பெறுமதியில் 3/5 பங்கினும் கூடியதைக் கொண்டதாகும். குருமத் தோலுற்பத்தி, உற்பத்தி முழுப் பொறுப்பில் 1/5 பங்கினைக் கொண்டதாகும். வகை செய்யப்பட்ட தோலுற்பத்திகளின் பெறுமதி ரூ. 209,290 ஆகும்.

தேசிய ஆடைக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி, பருத்தி நூல், பருத்தி ஆடைவகை கள், பலவித ஆடைவகைகளின் சீராக்கம் ஆகியவற்றைக் கொண்டதாகும். பருத்தி நூலின் உற்பத்தி 241 இலட்ச இறுத்தல்களிலிருந்து 236 இலட்ச இறுத்தல்களுக்குச் சிறிதளவு வீழ்ச்சியுற்றது. 46 இலட்ச யார்கள் கொண்ட ஏனைய ஆடை வகைகள் உருவாக்கத்தில் இருக்க, ஆடை வகைகளின் உற்பத்தி 28 இலட்சம் யார்களாக இருந்தது. இரு மாதங்களுக்கு, ஆடை ஆலையில் ஏற்பட்ட கைத்தொழிற் சச்சரவினால் வேலை நிறுத்தப்பட்டிருந்த போதும், இவ்வுற்பத்தித் தொகைகள் கிடைக்கப்பெற்றன.

இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி, 1966ஆம் ஆண்டில் 53254 தொன்களுக்கு 2904 தொன்களால் அதிகரித்தது. தற்போது, இக்கூட்டுத்தா பனத்தின் உற்பத்தி முக்கியமாக இல்மனைற் ஆகும். ஆனால், ஏனைய கனிப் பொருட் களுக்கும் உற்பத்தியை விரிவடையச் செய்வதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய சிறு கைத்தொழில்கள் கூட்டுத்தாபனம் மூன்று பகுப்புப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. தளபாடம், ஓடுகளும் செங்கற்களும் ஆகியவற்றின் உற்பத்திப் பெறுமதிகள் முறையே 1965ஆம் ஆண்டின் ரூ. 436 இலட்சத்திலிருந்து ரூ. 443 இலட்சத்திற்கும், ரூ. 156 இலட்சத்திலிருந்து 253 இலட்சத்திற்கும் அதிகரித்தன.

உற்பத்தி செய்யப்பட்ட ஆயுள்வேத மருந்து வகைகளின் பெறுமதி ரூ. 600,000 ஆகும். மரவேலைப் பகுதியின் உற்பத்தி, கூலி, மூலப் பொருட்கள் ஆகியனவற்றின் செலவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. செங்கல், ஓடு ஆகிய பகுதியின் உற்பத்தியைப் பாதிக்கும் காரணிகள், தொழிலுக்கு வராமை, அடிக்கடி ஏற்படும் இயந்திரங்களின் பழுதுகள், தொழில் நுட்பப் பிரச்சினைகள் ஆகியவையாகும்.

இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி, நெல், தெங்கு, தேயிலை, இரப்பர் ஏனைய பயிர்கள் ஆகியவற்றிற்கு உயிர்ப் பொருள் சார்பில்லாத உரம் தயாரிப்பதைக் கொண்டதாகும். விவசாயத் தேவைகளுக்கு வழங்கப்பட்ட உரத்தின் முழுத் தொகையானது 1965ஆம் ஆண்டின் 92057 தொன்களுக்கு எதிராக, 1966ஆம் ஆண்டில் 107,147 தொன்களைக் கொண்டதாகும்.

அரசாங்க இரும்புப் பொருள் கூட்டுத்தாபன உற்பத்திப் பெறுமானம் ரூ. 360,000 ஆகும். இக் கூட்டுத்தாபனம் 1960ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய உற்பத்திகள், தேயிலைப் பெட்டிகள், ஒட்டுக் கதவுகள், தடை மட்டைகள், ஒட்டு மட்டைகள் ஆகியவற்றைக் கொண்டவையாகும். உற்பத்தியின் மொத்தப் பெறுமதி 1965ஆம் ஆண்டின் ரூ. 5,200,000 இலிருந்து, ரூ. 6,517,000 ஆக்கு அதிகரித்தது. உற்பத்திப் பெறுமதியிற் கிட்டத்தட்ட 2/3 பங்கு, தேயிலைப் பெட்டிகள் செய்வதற்கான ஒட்டுப்பலகைத் தயாரிப்பினைக் கொண்டதாகும்.

ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனத்தின் சீனி உற்பத்தி, 3273 தொன்களிலிருந்து, 1966ஆம் ஆண்டில் 2,553 தொன்களுக்கு வீழ்ச்சி அடைந்தது. இதற்குக் கூடுதலாக, இவ்வாண்டில், 833,994 தெளிவான கலன் திராவகம் உற்பத்தி செய்யப்பட்டது.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் பொது உப்பின் உற்பத்தி, 1965ஆம் ஆண்டின் 382,589 அந்தர்களிலிருந்து, 1966ஆம் ஆண்டில் 13 இலட்சம் அந்தர்களுக்கு அதிகரித்தது. இக் கூட்டுத்தாபனத்தின் உப்பு உற்பத்திப் புள்ளிகளின் அதிகரிப்பு, உப்புத் திணைக்களம் 1966 யூலையில் கூட்டுத்தாபனத்துடன் ஒன்று சேர்ந்தபின், தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித் தொகையுடன் உப்புத் திணைக்களத்தினதையும் உள்ளடக்கியதனாலே ஏற்பட்டதாகும்.

**விலைக்கொள்கையும் இலாபங்களும்** Price Policy.

வரிக்குப்பின், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் ரூ. 25 இலட்சமாக மதிப்பிடப்பட்டன. 1965ஆம் ஆண்டில் வரிக் கொடுப்பனவுக்கு முன் இலாபங்கள் ரூ. 49 இலட்சமாகும். புதுச் சாதனத்தின் செயற்படுத்துதலுடன், தொன்னுக்கு ரூ. 125 ஆகிய சீமெந்து உற்பத்தியின் சராசரி உற்பத்திச் செலவு மெச்சத்தக்களவு வீழ்ச்சியுறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,அப்படி இருந்தும், முடிவு பெற்ற பொருட்களைப் பிரதான சந்தைகளுக்குப் புகையிரத மூலமாக அனுப்புதல், களிமண், சுனிக்கல், எரிபொருள் ஆகியவற்றைத் தொழிற்சாலைக்குக் கொண்டுவருதல் ஆகியவற்றில் ஏற்பட்ட உயர்ந்த போக்குவரத்துச் செலவினாலே காங்கேசன் சீமெந்துத் தொழில்களின் பொருளாதாரம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது. இக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட சீமெந்தின் சில்லறை விலை தொன்னுக்கு ரூ. 190ஆக இருக்க, கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பொது நிலையங்கள் ஆகியவற்றுக்குரியவிலை தொன்னுக்கு ரூ. 180/- ஆக இருந்தது. பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் நியதிகளின்படி, ஏனைய கூட்டுத்தாபனங்களுக்குள், இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் 12·6 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய வரவினைக் காட்டியது.

# அட்டவணை II (ஆ) ஆ—2

## 1964—1966ம் ஆண்டுகளில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களால் (நேரடி வரிகளுக்கு முன்) பெறப்பட்ட இலாபங்கள்

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | இலாபம்/ நட்டம் 1964 ரூபா | இலாபம்/ நட்டம் 1965 ரூபா | இலாபம்/ நட்டம் 1966 ரூபா | 1966ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா | பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் சதவீதமாக 1966ம் ஆண்டிற்குரிய இலாபம்% |
|---|---|---|---|---|---|
| 1. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 6,136,198 | இலாபம் 4,940,000 | இலாபம் 2,500,000* | 19,873,000 | 12·6 |
| 2. தேசிய ஆடைக் கூட்டுத்தாபனம் | இலாபம் 1,500,000 | இலாபம் 1,600,000 | இலாபம் 1,400,000 | 39,900,000 | 3·5 |
| 3. ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 500,000 | வி.கி. | வி.கி. | வி.கி. | — |
| 4. கிழக்குப்பகுதி காகித ஆலைக் கூட்டுத்தாபனம் ... | நட்டம் 371,156 | இலாபம் 1,462,762 | இலாபம் 3,411,085 | 19,272,602 | 2·1 |
| 5. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் ... | நட்டம் 730,000 | நட்டம் 208,487 | இலாபம் 190,000* | 10,000,000 | 1·9 |
| 6. இலங்கை எண்ணெ, கொழுப்பு கூட்டுத்தாபனம் ... | நட்டம் 350,000 | வி.கி.†† | வி.கி. | வி.கி. | — |
| 7. இலங்கை பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 507,892 | இலாபம் 511,500 | இலாபம் 623,741* | 17,935,000 | 3·5 |
| 8. இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 103,000 | நட். * * * 309,046 | வி.கி. | 7,402,326 | — |
| 9. இலங்கை தோற்பொருட் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 478,100 | இலாபம் 257,600 | இலாபம் 144,260* | 3,795,040 | 3·8 |
| 10. இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் ... | இலாபம் 267,800 | இலாபம் 232,375 | வி.கி. | வி.கி. | — |
| 11. தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம் ... | நட்டம் 690,000 | நட்டம் 868,000 | நட்டம் 800,000* | 16,512,196 | — |
| 12. தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் | — | இலாபம் 548,083 | இலாபம் 1,200,000 | வி.கி. | — |
| 13. இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | — | இலாபம் 518,211* | இலாபம் 450,000* | 182,549(1) | — |
| 14. இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம் ... | | உற்பத்தியில் இல்லை | | 87,500,000 | — |
| 15. இலங்கை தேசிய இரும்புப் பொருள் கூட்டுத்தாபனம் ... | — | — | நட்டம் 325,000 | 17,250,000 | — |
| 16. இலங்கை தேசிய மா அரைத்தல் கூட்டுத்தாபனம் ... | | உற்பத்தியில் இல்லை | | 15,983,175 | — |
| 17. கைத்தொழிற் பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் ... | நட்டம் 6,373 | இலாபம் ††† 40,000 | வி.கி. | வி.கி. | — |
| 18. இலங்கை ரயர் கூட்டுத்தாபனம் | | உற்பத்தியில் இல்லை | | | |
| மொத்தம் ... | இலாபம் 7,345,461 | இலாபம் 8,724,998 | இலாபம் 7,144,086† | 144,537,838† | 4·9 |

மூலம்: உரிய கூட்டுத்தாபனங்களிடமிருந்து பெற்ற தரவு.

இவ் எண்கள் தற்காலிகமானவையும் கணக்காய்விற்கு உட்படாதவையும் ஆகும்.

* வரிக்குப்பின்

† இலங்கை கனிப்பொருள் மணல், தேசிய உப்பு, இலங்கை உரம், இலங்கை எஃகு, இலங்கை மா அரைத்தல் கூட்டுத்தாபனங்களுக்காய எண்தொகைகளைத் தவிர்த்து.

* * *1966 மாச்சு முடிவு வரை எதிர்பார்க்கப்பட்ட நட்டம்.

† † எதிர்பார்க்கப்பட்ட ஓர் இலாபம்.

† † † 31-3-66 முடிவு வரையிலான மதிப்பீடு.

வி.கி. விபரம் கிடைக்கவில்லை.

(1) தற்போதைய நிலையின்படி கூட்டுத்தாபனம் எதுவித உரப்பொருளையும் உற்பத்தி செய்யவில்லை. ஆனால் அது இறக்குமதியாளராகவும், விநியோகிப்பாளராகவும் கடமை ஆற்றுகிறது. இதனால் இக்கூட்டுத்தாபனத்தின் நிலையான மூலதனம் குறைவானதாகும்.

உற்பத்தியின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புடன், கிழக்குப் பகுதிக் காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் ரூ. 1,462,762இலிருந்து ரூ. 3,411,085இற்குக் கூர்மையாக அதிகரித்தன. அரசாங்கம் பலதரங்களிலுள்ள காகிதத்தின் கொள்வனவிற்காக அதன் விலையை அதிகரிப்பதற்கு ஒப்புக் கொண்டபின், இக் கூட்டுத்தாபனத்தால் அதன் உற்பத்திகளை ஒரு உண்மை அடிப்படையில் விலையிட முடிந்தது. 1960ஆம் ஆண்டிற் பெருமளவு உற்பத்தியினுலேற்பட்ட உற்பத்திச் செலவுகளின் குறைவு, மூலதனப் பொருட்களினதும், இரசாயனப் பொருட்களினதும் உலகச் சந்தை விலை அதிகரிப்பால் ஈடுசெய்யப்பட்டது. இதனுல், உற்பத்திச் செலவுகளில் 1965ஆம் ஆண்டிற்கும் 1966ஆம் ஆண்டிற்கும் இடையில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. காகித இறக்குமதி கிழக்குப் பகுதிக் காகித ஆலைக் கூட்டுத்தாபனத்திற் பொறுப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விறக்குமதிப் பொருட்களின் விலைகள், கொ. கா. க. பெறுமதி, தீர்வை, அலுவலகச் செலவுகளை அடைப்பதற்கான சிறிய இடைவெளி என்ற மூன்றும் சேர்ந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினுலே தயாரிக்கப்பட்ட மேற்கூறியதற்குத் தொடர்பான உற்பத்திப் பொருட்களின் விலைகள், இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களுக்குத் தொடர்பாகவே தீர்மானிக்கப்பட்டன. உற்பத்தியிலிருந்து எழும் இலாபங்களின் ஒருபகுதி, அரசாங்கத்தினுற் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் விற்கப்படுகின்றதான பயிற்சிப் புத்தகங்கள் போன்ற சில விடயங்களிற்கு மானியமளிப்பதற்கு உபயோகிக்கப்பட்டது.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், தொழிற்சாலை நிறுவியதற்குப்பின் முதல் முறையாக 1965ஆம் ஆண்டின் ரூ. 208487 கொண்ட நட்டத்திற்கு எதிராக 1966ஆம் ஆண்டில் ரூபா 190,000 கொண்ட இலாபத்தினைக் காட்டியது. மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பினுல் உற்பத்திச் செலவிற் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், இவ்விலாபம் எய்தப்பட்டது. உணவு, உப்பு, பாசிகம் ஆகியவற்றில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பு இவ்விலாபத்திற்குக் காரணியாக அமைகின்றது. அரசாங்கமானது, இறக்குமதி செய்யப்பட்டதும், உள்நாட்டிலே தயாரிக்கப்பட்டதுமாகிய இரண்டு பொருட்களினதும் விலையைத் தொன்னுக்கு ரூ. 925 ஆகத் தீர்மானித்தபின்னர், இக்கூட்டுத்தாபனத்தால் எரிசோடாவிற்குச் சிறந்த விலையைப் பெறமுடிந்தது. 1966ஆம் ஆண்டில் தேசிய உப்புக்கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் ரூ. 12 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. தயாரிக்கப்பட்ட உப்பின் விலைகள், அரசாங்கத்தினுல் முந்திய உப்பு நிலையத்தில் அந்தருக்கு ரூ. 4·50 ஆகவும், முந்திய கடைகளில் ரூ. 5·50 ஆகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனத்தின் 1966ஆம் ஆண்டின் ரூ. 623,741 கொண்ட இலாபங்கள், முந்திய வருடத்திலும் பார்க்கக் கிட்டத்தட்ட 20 சதவீதம் கூடியனவாகும். உற்பத்திச் செலவின் 2 சதவீத அதிகரிப்பு முக்கியமாக, புதிய கூலி, சம்பள அமைப்பினைப் புகுத்திய பின் ஏற்பட்ட கூலி, சம்பள அதிகரிப்பினுல் ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலும் சிறு அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்கு, இப்பொருட்களின் இறக்குமதித் தீர்வைகளின் சலுகை வீதங்களை அங்கீகரிப்பதனுல் ஏற்பட்ட சுணக்கம், காரணமாகும். இக் கூட்டுத்தாபனம் தனது உற்பத்திகளின் பெருமளவு பங்கினைத் தரகு அடிப்படையிற் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு விற்பனவு செய்ய, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், உற்பத்திகளைப் பலநோக்கு உற்பத்தி விற்பனைச் சங்கங்களுக்குப் பங்கீடு செய்யும். தொடக்கத்திலிருந்து இக்கூட்டுத்தாபனத்தின் பொருட்களினது விற்பனவு விலைகள் மாற்றமடையவில்லை. இக்கூட்டுத்தாபனத்தின் முடிவு பெற்ற பீங்கான் பொருட்கள், எப்போதும் உடனடி விற்பனையையும், கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு உயர்வான கேள்வியையும், கொண்டுள்ளன. 1966ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம், உள்நாட்டுக் களிமண் கலங்களின் தேவைகளின் 40 சதவீதத்தையே உற்பத்திசெய்தது.

இலங்கை தோற்பொருட் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் வரிக்குப்பின் 1965ஆம் ஆண்டின் ரூ. 257,600க்கு எதிராக ரூ. 144,260ஆக இருந்தன. இலாபங்களின் வீழ்ச்சிக்கு, விற்கும் விலைகள் மாற்றமுறாதிருக்க, உற்பத்திச் செலவில் அதிகரிப்பு ஏற்பட்டதே காரணமாகும். விற்கும் விலைகள், போட்டி அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டு, காலணிகளுக்கு, ஏனைய தயாரிப்பாளர்களால் அறவிடப்படும் விலைகளுக்குத் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும். மொத்த விற்பனவு வரியின் 3 இலிருந்து 5 சத வீதத்திற்கான அதிகரிப்பும், இலாபங்களைப் பாதித்தது. இறக்குமதி செய்யப்பட்ட மூல தனப் பொருட்களின் விலையின் அதிகரிப்பு, சுங்கத் தீர்வைகள் சராசரி 17 சதவீதத்தி லிருந்து 30 சதவீதத்திற்கு அதிகரித்தமையாலே ஏற்பட்டதாகும். கூலி, சம்பளங்கள் ஆகியனவற்றை உயர்த்துவதற்கான புனராய்வும் உற்பத்திச் செலவுகளை அதிகரித்தது.

1966ஆம் ஆண்டிலே தேசிய ஆடைக்கூட்டுத்தாபனத்தின் மதிப்பிடப்பட்ட இலாப மானது, வரிக்குமுன், 1965ஆம் ஆண்டின் ரூ. 16 இலட்சத்திற்கு எதிராக, ரூ. 14 இலட்சமாக இருந்தது. கூட்டுத்தாபனம் தன் உற்பத்திகளின் விற்பனவு விலைகளை நிர்ணயிப்பதில், எல்லாச் செலவுகளையும் கணக்கெடுத்து, முதலீட்டின் பேரில் 10 சதவீதமான பொதுப்படைப்பயனளிப்பிற்கும் ஏற்பாடு செய்தது. சில பொருட்களின் விலையை நிர்ணயிப்பதற்கு, இக்கூட்டுத்தாபனம், ஒப்பியல்பான இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களின் விற்பனவு விலைகளையும் கணக்கில் எடுத்தது.

இலங்கை கனிப்பொருள், மணல் கூட்டுத்தாபனத்தின் இல்மினைற் உற்பத்திச் செலவு இவ்வருடத்தில் ஏறக்குறைய நிலையானதாகவே இருந்தது. மாச்சு தொடக்கம் ஒகத்துவரை உள்ள உச்ச உற்பத்தி மாதங்களின், உற்பத்திச் செலவுகள் சாதாரண மாக வீழ்ச்சிப் போக்கைக் கொண்டிருப்பனவாகும். இருந்தும், முழுச் செலவுகள், சுரங்க வேலைச் சாதனத்தின் பராமரிப்புச் செலவில் அதிகரிப்பேற்பட்டதால், வீழ்ச்சி யடையவில்லை. இக்கூட்டுத்தாபனத்தின் இலாபம், இல்மினைற்றின் விலையிற்றங்கியுள்ளது. ஆனால், இவ்விலையானது, முழுத்தொகையையும் ஏற்றுமதி செய்வதினாற் கூட்டுத் தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும். கடந்த சில ஆண்டுகளாக இல்மினை ற்றின் விலை நிலையானதாகவும், அதன் உற்பத்தி கால நிலைகளால் நிர்ணயிக்கப்பட்டும் இருந்தது. மழை காலங்களில், உற்பத்தி பாரதூரமான பிற்போக்கினை அடையும். தற்போது இல்மினைற்றிற்கான சந்தை யப்பானிலேயே முழுவதும் உள்ளது. கூட்டுத்தா பனம் ஏனைய சந்தை வாய்ப்புக்களை ஆராய்கிறது.

தேசிய சிறு கைத்தொழில்கள் கூட்டுத்தாபனத்தின் மரவேலைப்பகுதி தொடர்ந்தும் நட்டத்திலேயே உற்பத்தி செய்தது. ஆனால் 1966ஆம் ஆண்டில், இந்நட்டம் கிட்டத் தட்ட ரூ. 550,000 அளவிற்குக் குறைக்கப்பட்டது. பாரதூரமான தொழில் நுட்பப் பிரச்சினைகளால் ஓடு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், 1966ஆம் ஆண்டில் ரூ. 350,000 கொண்ட நட்டத்தினை அடைந்தன. ஆனால் இக்கூட்டுத்தாபனம் இலாபம் கிடைக்குமென எதிர்பார்த்தது. ஆயுள்வேத மருந்துப்பகுதி சென்ற வருடம் ரூ. 100,000 கொண்ட இலாபத்தை எய்தியது. கூட்டுத்தாபனத்தின் 1966ஆம் ஆண்டின் பொதுப் படை நிலைமை, ரூ. 800,000 நட்டத்தைக் கொண்டதாகும்.

தளபாடம், படகுகள் ஆகியவற்றின் உற்பத்தி செய்யும் மரவேலைப்பகுதியின் இலாபம், முக்கியமாக, இவ்விடயங்களிலே திறைசேரியால் தீர்மானிக்கப்படும் விலை களிலேயே தங்கியுள்ளது. செங்கற்கள், ஓடுகள், மருந்துகள் ஆகியவற்றின் விலைகள், சந்தையிற் கிடைக்கப்பெறும் விலைகளுக்குத் தொடர்பாகவே தீர்மானிக்கப்படுகின்றன. ஆயுள்வேத மருந்துப் பகுதியின் விலைகள், செலவு மதிப்பீடுகள் அடிப்படையிலும், ஆயுள்வேத ஆணையாளர்களிடம், ஆலோசனை பெற்று, அரசாங்க நிலையங்களுக்கு

நிரம்பல் செய்யப்படும் மருந்துகளின் விலைகளுக்குத் தொடர்பாகவும், நிர்ணயிக்கப் படுகின்றன. பொதுமக்களுக்குச் செய்யப்படும் விற்பனவுகளின் விலைகள், அரசாங்கம், உள்நாட்டு அரசாங்க நிலையங்கள் ஆகியவற்றிற்கான விலைகளிலும் பார்க்க, 10 தொடக்கம் 20 சதவீதம் வரையில் அதிகமானவையாகும்.

இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் வரிக்குப்பின் கிட்டத்தட்ட ரூ. 450,000ஆகும். இதனிலும் பார்க்க ரூ. 518,211 ஆகிய 1965ஆம் ஆண்டின் இலாபங்கள், கூடியவையாகும். கூட்டுத்தாபனத்தின் விற்பனவு விலைகள், அதிக உற் பத்திச் செலவுகள் இருந்த போதிலும் மாற்றமுறாது இருந்தன. உரங்களின் விலைகள், கொ. கா. க. விலையுடன் கைமாறுதல்கள், களஞ்சியப்படுத்துதல், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றின் தீர்வை, அறவீடுகள் முதலியவற்றையும் உள்ளடக்கும் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. இக்கூட்டுத்தாபனம், விலைகளை நிலையானவையாக வைத்திருப் பதற்கு, செலவுகளின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி எதனையும் தடுத்தல் மூலம், முயற்சி எடுத்துள்ளது. பெருந்தொகையாகக் கொள்வனவு செய்யும் அரசாங்க நிலையங் களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும், விசேட விலைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்க இரும்புப் பொருட் கூட்டுத்தாபனத்தின் விலையிடும் கொள்கை யானது, ஆரம்பத்திலே, உற்பத்தி விலைகளைச் சந்தை விலையிலும் சிறிதளவு குறைவாகவே தீர்மானித்தல் என்பதைக் கொண்டதாகும்.

**விரிவிற்கான திட்டங்கள்**

சீமெந்தின் நடைமுறை ஆண்டு நுகர்வு 300,000 தொன்களாகும். இதனின் கிட்டத்தட்ட 80,000 தொன்கள் உள்நாட்டில், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற் சாலையால் உற்பத்தி செய்யப்படுகின்றன. காங்கேசன்துறை சீமெந்து வேலைகள், அதன் ஆண்டு உற்பத்தித் தொகையை 80,000 தொன்களிலிருந்து 275,000 தொன்களுக்கு அதிகரிப்பதற்கான நோக்கத்துடன், விரிவு புதுப்பித்தல் வேலையில் ஈடுபட்டிருந்தன. இத்திட்டத்தின் முதற்கட்டம், 1966ஆம் ஆண்டில் புதுச் சூளையின் செயற்படுத்தலுடன் ரூ. 670 இலட்சம் செலவோடு முடிவடைந்தது. இவ்வாண்டில் காலியிலுள்ள இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் இறுதியான அரைத்தல், நிரப்பல் செய்யும் இயந்திரம், ஆண்டொன்றுக்கு 100,000 தொன்கள் தொடக்க ஆற்றலுடன் முடிவடைந்தது. புத்தளத் திலுள்ள 220,000 தொடக்க ஆற்றலுடன் கூடியதான சீமெந்து செய்யும் இயந்திரத்தின் மீதான வேலை தொடக்கப்பட்டது. இவ்வியந்திர வேலை 1969ஆம் ஆண்டில் முடிவடைதற்குரியது. புத்தள சீமெந்துத் தொழிற்சாலையின் முதற்கட்டத்தின் மீதான மூலதனச் செலவு, கிட்டத்தட்ட ரூ. 810 இலட்சத்தைக் கொண்டதாகும். மேலும் 220,000 தொன்கள் உற்பத்தி செய்யும் நோக்கத்திற்கான இரண்டாம் கட்டத்தின் மீதான மூலதனச் செலவு, கிட்டத்தட்ட ரூ. 610 இலட்சத்தைக் கொண்டதாயிருக்கும்.

கிழக்குப் பகுதிக் காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் காகித ஆலை உற்பத்தியை 3750 இலிருந்து 9000 தொன்களுக்கு அதிகரிப்பதற்கான திட்டம், 1966ஆம் ஆண்டில் முடிவடைந்தது. இக்கூட்டுத்தாபனம், 1967ஆம் ஆண்டில் 9000 தொன்கள் ஆற்றலுடன் காகித மட்டை ஆலையினையும் வாழைச்சேனையில் நிறுவி, வேலை தொடங்குவதற்கு உத்தேசித்துள்ளது. மலைநாட்டில் செய்தி அச்சு ஆலை கட்டுவதற்கான அமைப்பு ஆய்வு ஒன்றும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் நுண்ணிய காகித ஆலை யொன்றை நிறுவுவதற்கான வசதியும் பரிசோதிக்கப்பட்டது.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் 1967ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 400 தொன்கள் மிகையான பாசிகத்தை உபயோகிப்பதற்கான நீரகமும், பாசிகத் திராவகமும் உள்ளடக்கிய இயந்திரம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு உத்தேசித்தது. அடுத்த ஐந்து

ஆண்டுகளில் இக்கூட்டுத்தாபனம் எரிசோடா உற்பத்தியை 200 சதவீதத்தால் முழு உள்நாட்டுக் கேள்வியையும் நிரப்பும் முகமாக அதிகரிப்பதற்கு ஒரு இயந்திரத்தை நிறுவவும், உத்தேசித்தது. சோடாத்தூள், நவச்சியப் பாசிகை ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான இயந்திரமொன்றை நிறுவுவதற்கும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இக்கூட்டுத்தாபனம் சோடாத்தூள் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கிறது.

இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனத்தின் புதிய பிலியந்தலத் தொழிற்சாலையில், பீங்கான் பொருட்களின் வர்த்தக உற்பத்தி 1966 டிசெம்பரில் தொடக்கப்பட்டது. அத்துடன் சுகாதார அணியடுக்குகள், சுவர் ஓடுகள் ஆகியவற்றின் உற்பத்தி 1967இல் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நீர்கொழும்புத் தொழிற்சாலையில் 160 தொன்கள் மேலதிகக் களிமண் கலங்கள் உற்பத்திக்கும், 300 தொகைகள் இன்சுலேட்டர் உற்பத்திக்கான இன்சுலேட்டர் திட்டத்திற்குமாக, சூளையின் விரிவிற்கான திட்டங்கள் 1966ஆம் ஆண்டிற் பரிசோதிக்கப்பட்டன. 1966ஆம் ஆண்டில் இக்கூட்டுத்தாபனம் நாட்டின் களிமண் கலங்களின் தேவைகளின் 40 சதவீதத்தையே உற்பத்தி செய்தது. பிலியந்தல தொழிற்சாலை முழு உற்பத்தியில் இருக்கும்போது, கூட்டுத்தாபனம் நாட்டின் முழுக் களிமண் கலங்கள் தேவைகளையும் நிரப்புவதற்கு எதிர்பார்க்கிறது. வெண்ணிறக் களிமண் சுத்திகரிக்கும் இயந்திரத்தை முழு ஆற்றலில் வேலை செய்யக் கூடியதாயாக்குவதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட வெண்ணிறக் களிமண் ஏற்றுமதிக்கான சாத்தியக் கூறுகள் பரிசோதிக்கப்பட்டன.

தேசிய ஆடைக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான பருத்தி ஆடை ஆலைத்தொடர்பான ஆரம்ப வேலை 1967ஆம் ஆண்டில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாலை முடிபுபெற்றபின்பு ஆண்டொன்றுக்கு 174 இலட்ச இருத்தல்கள் கொண்ட திரித்த நூல் ஆற்றலுடன், 113,000 நூற்புக்கதிர், 140 இலட்ச யார்கள் ஆற்றலுடன், 560 தறிகள் ஆகியவற்றையும், ஆண்டொன்றுக்கு 400 இலட்ச யார்கள் சீராக்கும் ஆற்றலையும் கொண்டதாயிருக்கும். இக்கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் சீன மக்கட் குடியரசுடன் உள்ள பொருளாதார உதவி உடன்படிக்கையின் கீழ், ஆண்டொன்றுக்கு 100 இலட்சம் யார்கள் ஆற்றலுடன் 700 தறிகளையும், 41,600 நூற்புக்கதிர்களுடன் பருத்தி நூற்றல் நெய்தல் ஆலையொன்றினைத் தொடக்கவும், உத்தேசித்துள்ளது. இத்துடன் 400 இலட்ச யார்கள் ஆற்றலுடன் வேறொரு சீராக்கல் இயந்திரமும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கை தோல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், தோல் பதனிடுதல் விரிவின் கணிப்பொன்றினை மேற்கொண்டுள்ளது. இதற்கான வேலை 1967ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு முடிவுபெறுவதற்கு இரு ஆண்டுகள் செல்லும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 1966ஆம் ஆண்டில் இக்கூட்டுத்தாபனம் காலணிகளின் சீமெந்து உள்ளிடுதல் தயாரிப்பிற்கான இயந்திரத்தைக் கொள்வனவுசெய்தது.

பாதகமான கால நிலையினால் உற்பத்தியில் ஏற்படும் இயக்கப் பின்னடைவினைத் தவிர்க்குமுகமாக இலங்கை கனிப்பொருள், மணல் கூட்டுத்தாபனம் நிலைமை மோசமான காலங்களில் வேலைசெய்தற்காக 20 தொன் மண் காய்ச்சிகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் நோக்கம் பார கனிப்பொருள் மணல் பதனிடும் வசதிகளை நாடியறிந்து, இல்மினைற்றைவிட மற்றைய உற்பத்திகளை அதாவது பயன் கூட உள்ளவற்றை உற்பத்தி செய்வதேயாகும். ஒரு தொன் இல்மினைற் ரூ. 25/-ற்கு விற்க, றூற்றைல் ரூ. 500/-ற்கும், கனிமக்கல் ரூ. 340/-ற்கும் விற்கப்படும். இக்கூட்டுத்தாபனம், றூற்றைலையும் கனிமக்கல்லையும் வேறாக்கும் இயந்திரத்தை சீனன் குடாவில் ரூ. 35 இலட்சம் மதிப்பிடப்பட்ட செலவில் நிறுவும் முயற்சியில் உள்ளது. வர்த்தக அளவுக்கான உற்பத்தி 1968ஆம் ஆண்டளவிலே தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனமானது, 25 இலட்சம் மூலதனச் செலவில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை 1967ஆம் ஆண்டிலும், ரூ. 28 இலட்சம் செலவில் அமைப்புக் கடை, நாகம் பூசிய இயந்திரத்தை 1968ஆம் ஆண்டிலும் நிறுவுவதற்கு திட்டமிடுகிறது. இக்கூட்டுத்தாபனம் அடுத்த சில ஆண்டுகளுக்குள் கைத்தொழிலின் உற்பத்திகளை முழுமையாக உபயோகிப்பதற்காக மற்றும் பல துணைக் கைத்தொழில்களையும் நிறுவுவதற்கு எண்ணியுள்ளது. இலங்கை அரசாங்க இரும்புப் பொருட் கூட்டுத்தாபனம், உருக்கு இரும்பு வார்ப்படச்சாலை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

இலங்கை உரக் கூட்டுத்தாபனம் 1966ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் செலவில் தொடர் மாவட்ட உரக்களஞ்சியங்கள் கட்டுவதற்கான வேலைகளைத் தொடங்கியது. இது ஐந்து ஆண்டு காலத்திற்குப் பரந்து செல்லும். இவ்வருடத்தில் ரூ. 30 இலட்சம் மதிப்பிடப்பட்ட கலவையாக்கும் இயந்திரம் கட்டுவதற்கான நடவடிக்கையும் தொடக்கப்பட்டது.

தற்போது தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு, புத்தளம் உப்பளங்களின் விரிவினை மேற்கொண்டுள்ளது. இது, விரைவில் சாவகச்சேரியிலும் புதிய உப்பளம் ஒன்றை அமைப்பதையும் மேற்கொள்ளும்.